# செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு ௨௬ | திருவள்ளுவர் ஆண்டு ௧௯௮௩, வைகாசி
ஜூன் 1952 | பரல் ௧௰


ஓம்

திருச்சிற்றம்பலம்

## செம்பொருள் துணிவாம்
## சைவசித்தாந்த அடிப்படைக் கொள்கைகள்

ஓங்கும் ஒருமுதலும் ஈரருளும் முப்பொருளும்
பாங்கார் நெறிநான்கும் பண்ணலைந்தும்—தீங்கார்
அறுபகையும் எழ்பிறப்பும் எண்குணமும் ஒன்பான்
பெறுவுருவும் பத்தணைவும் பேசு.

க. ஒருமுதல்

சிறப்பருளும் செந்நெறியின்கண் முற்செய் தவப்பேற்றால் உறப்பெற்று நன்னெறியொழுகும் வாய்ப்புடைய நாடு நால்வர் பெருமக்கள் தோன்றியருளிய நற்றமிழ் நாடேயாகும். பொது வாக மக்கட்பிறப்பு ஏனை அறுவகைப் பிறப்பினும் உயர்ந்தது. அம் மக்கள்பிறப்பு நாடும் மொழியும் நற்கோளும்பற்றிப் படி முறை உயர்வு பகரப்படும். உண்மையான் நோக்குவார்க்குத் தெய்வ உண்மை தெளிந்து அவ்வுண்மையை வாழ்க்கையொடு படுத்தி வாழும் நாடே விழுத்தகு நாடாமென்பது நடுநிலை யாளர் எல்லாரானும் ஒப்ப முடிந்த ஒன்றாகும்.

நமக்கு வாழ்க்கை நூலாக நின்று நிலவும் பல நூல்களி னும் கண்போன்று சிறந்து விளங்குவன இருபெரும் நூல்கள். அவை ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியமும், எள்ளருஞ் சிறப்பின் வள்ளுவர் செய்தருள் தெய்வத் தமிழ்ப் பொதுமறை யாம் திருக்குறளும் என்ப. இவ்வருள் நூல்கள் இரண்டும் முறையே ஐயாயிரத்தறுநூறு யாண்டுகளுக்கும் இரண்டாயிரம் யாண்டுகளுக்குமுன் தோன்றியன என்று ஆராய்ச்சி வல்லுநர்

ஐயமின்றி அறுதியிட்டுக்கூறிய கோட்டமில் கட்டுரையால் விளங்கும். இவ்விரு பெருநூல்களும் முறையே நாட்டின் நடப்பும் நடந்துய்யவேண்டிய நனிநாகரிக நற்பண்பும் நயமொடு நன்கெடுத்தியம்புவன. இவை கடவுட் கொள்கையினைக் கைநெல்லியெனக் காட்டுவன. அகம் புறமாகக் கடவுள் வழிபாடு ஆற்றித் தொடங்குவன. கடவுள் நிலையை மெய்யுணர்வு (சிவஞானம்) வாயிலாக விளக்குவன. விழுமிய முழுமுதல் ஒன்றே என்னும் உண்மையை வண்மைபெற வகுப்பன.

முழுமுதற் கடவுள் ஒருவனே. அவன் பிறவா யாக்கைப் பெரியோன், நுதல்விழி நாட்டத் திறையோன், முக்கட் செல்வன், தக்க தவத்தோன், மிக்க முதவ்வன், இறவா இன்பச் சிறப்போன், உலகுயிர்களுடன் பின்னிக் கலந்தியக்கும் பெருமான், எண்பேருருவினன், வாலிழைபாகத் தொருவன், விளங்கிய அறிவினன் என வழங்கப்படுவன்.

உலகிடைக் காணும் அறிவில் பொருள்களனைத்தும் அறிவுடைப் பொருள்களின் அன்பறிவாற்றல்களின் துணையால் உருமாறிப் பொருளாகிப் பெயர்பெற்று அறிவுடை உயிர்க்கு ஆக்கமாய் நன்மை எய்துகின்றன. இவ் வழியளவையான் உலகமும் உலகிடை உடலொடு பொருந்திவாழும் ஆருயிர்த்தொகுதிகளும் ஒரு முதலின் உறுதுணையின்றி இயங்கா உணரா வாழா என்பன உண்மை.

அம் முதல், ஒன்றே என்பது யாவர்க்கும் ஒப்பமுடிந்த துணிவு. இம் முதலை மூவாயிரம் யாண்டு தவயோகத் தமர்ந்து அருளிச்செய்த தமிழாகமமாகிய திருமூலர் திருமந்திரத்தின் கண்,

> ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
> நன்றே நினைமின் நமனில்லை நாணுமே
> சென்றே புகுங்கதி யில்லைநுஞ் சித்தத்து
> நின்றே நிலைபெற நீர்நினைந் துய்ம்மினே.—திருமந்திரம் உ௧0௪.

தெய்வத்துணையால் சிறக்கும் மக்கட்குலம் ஒன்றே என்பது பொருளுண்மை உணர்ந்தார் உளத்தென்றும் நீங்கா வாய்மையாம். அம்முதலையே தெய்வச் செந்தமிழ் முழுமுதல் நூலாம், மெய்கண்டார் நூற்கண் "அந்தம் ஆதி என்மனார் புலவர்" என அருளிச் செய்யப்பெற்றுள்ளது.

உ. ஈரருள்

அம் முதல்வன் "வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன்" ஆவன். அவன் தானே விளங்கும் அன்பு அறிவு ஆற்றல் மூன்றும் உடையன். இம் மூன்றும் ஒரு புடையாக

இருக்கை விளக்கம் விரவிஇயக்கல் என விளம்பலாம். அன்பு உயிராகவும் அறிவு ஆணுகவும் ஆற்றல் பெண்ணுகவும் உருவகம் செய்யப்படும். அம்முறையில் அருள்நிறை அப்பனேடு அம்மையாகச் செப்புவர். அவ்வருள் பல வகையாக வகுத்தும் விரித்தும் கூறப்பெறினும் தொகுத்துச் சுட்டுங்கால் இரண்டு வகையாகக் கூறலாம். ஒன்று உயிரொடு பின்னி (அத்துவிதம்) உடல் உலகுகளிடைப் பொருத்திப் புணர்ப்பாய் வினைக்கீடாக ஆட்டுவிக்கும் நிலையும், வினை மாசகற்றி அவ் வுயிர்களைத் தூய்மையாக்கி ஆண்டவன் திருவடியாகிய 'பேரா ஒழியாப் பிரிவில்லா, மறவா நினையா அளவிலா மாளா இன்ப'த்தின்கண் கூட்டுவிக்கும் நிலையுமென இருவகைப்படும். இவ் விரண்டும் முறையே நடப்பும் வனப்பும் என நாட்டப்பெறும். இவ் வுண்மை செந்நெறித் தெய்வத் திருமந்திரமாகிய 'சி வ ய ந ம' என்னும் ஐந்தெழுத் தருமறையால் ஆராய்வார்க்குப் புலனும். திருவருளை ஆணை என்றும், அவ்வாணை உலகுயிர்களுடன் புணர்ப்பாய் நிற்குமென்றும், ஆண்டவன் அவ் வாணையுடன் பிரிப்பின்றி நிற்பனெனவும், இந்நிலையே ஒன்ருய் வேருய் உடனுய் நிற்கும் அத்துவித நிலையென்றும் மெய்கண்டார் தாம் அருளிய சிவஞானபோத இரண்டாம் சூத்திரத்தின்கண் விளக்கியுள்ளார்.

௩. முப்பொருள்

இறை உயிர் தளை என இயம்புவர். இவை முறையே பதி பசு பாசம் எனப் பகர்வர். இம் மூன்றும் தொன்மையே. இவற்றுள் இயல்பாகவே எல்லா வகையானும் ஓங்கி யுயர்ந்தது இறை. அஃது ஒன்றே.

உயிர் பண்டே புல்லிய மலப் பிணிப்பால் அன்பறிவாற்றல்கள் விளங்கும் வாயிலின்றி இன்புருது துன்புறலாயிற்று. அவ்வுயிர் எண்ணிறந்தன. என்றும் உள்ளன. சார்ந்து விளங்குவன. இன்புறற்குரியன. அறிவிக்க அறிவன. வினைக்கீடாம் பல் பிறப்பின. சிவஞானபோதம் பன்னிரண்டு நூற்பாவின்கண்ணும் பரக்கக் காணலாம். மூன்று நான்காம் நூற்பாக்கள் பாழ், உடல், ஐம்பொறி, நுண்ணுடல், உயிர்வளி, கடவுள், முழுவுடல், உட்கருவி ஆகிய எட்டுக்கும் வேருக உயிர் என்றும் உள்ளது என அவ்வக் கொள்கையினரை மறுத்து வலியுறுத்துகின்றன.

தளை செம்பிற் களிம்புபோல வேறு காரணமின்றி ஒன்றி உடனுய் நிற்கும் மாசு. இது மலம், அழுக்கு, அறியாமையைச் செய்வது, ஆணவம், இருள், மருள், காரறிவு, மயக்கம், பாசம், செருக்கு என்னும் பல்பெயர்களை உடையது.

இம் மலப்பிணிப்பை அகற்றும்பொருட்டு நோய்க்கு மருந்து போல் இருவினையையும், மருத்துணு மருத்துக்கலம் உறையுள் முதலியனபோல் இரு வகையாகப் பகுப்புற்று நிற்கும் மாயையையும் இடையே ஆருயிர்க்கு ஆண்டவன் கூட்டுவிப்பன். இக்கூட்டும் திருவருட் செயலையே படைப்பெனப் பன்னுவர். மாயை கன்மங்கள் இடையே கூட்டுவிப்பதால் ஆகந்துக மலமென்பர். ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்களின் தன்மை மெய்கண்டான்தமிழ் இரண்டாம் நூற்பாவின்கண் விரிவாய்க் காணலாம்.

உண்மை அறிவு இன்பம் மூன்றும் உடையது இறை. உண்மை அறிவு இரண்டும் உடையன உயிர்கள். உண்மை ஒன்றே உடையன மலம் கன்மம் மாயைகள்.

"பதிபசு பாசம் எனப்பகர் மூன்றிற்
பதியினைப் போற்பசு பாசம் அனாதி
பதியினைச் சென்றணு காப்பசு பாசம்
பதியணு கிற்பசு பாசம் நிலாவே." —திருமந்திரம், ககடு.

ச. நானெறி

'சீலம் நோன்பு செறிவு அறிவு' என்பன நன்னெறிக்குய்க்கும் நானெறிகள். இவை முறையே சரியை, கிரியை, யோகம், ஞானம் எனப்படும். இவையே இறப்பில் தவம் என நம் மெய்கண்டார்நூல் எட்டாம் சூத்திரத்தின்கண் விளம்புகின்றது. இவையின்றி மக்களால் செய்யப்படும் நலம் பொல மிரண்டும் பயன் தந்து கழியும் இருவினையாகும். இவ் வினைக்கண்ணே வேள்வி தவம் தானம் முதலிய உலக வினைகளும் அடங்கும். கற்பார்க்குக் கல்வி யொழுக்கங்களே இறப்பில் தவமாம். ஊண் உடை உறையுள் பயிற்சி உறவு முதலிய இன்றியமையா ஒழுங்குகள் துணை நிற்கும் இருவினையாகும்.

"பசித்துண்டு பின்னும் பசிப்பானை ஒக்கும்
இசைத்து வருவினையில் இன்பம்—இசைத்த
இருவினை ஒப்பில் இறப்பில் தவத்தான்
மருவுவனாம் ஞானத்தை வந்து." —சிவஞானபோதம், அ. க-உ.

"நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலும்எம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையினாற் கும்பிட்டுக் கூத்தும் ஆடிச்
சங்கரா சயபோற்றி போற்றி என்றும்
அலைபுனல்சேர் செஞ்சடைஎம் ஆதீ என்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே."
—திருநாவுக்கரசு நாயனார், தேவா. சு. உசடு-ங.

இதன்கண் நாடொறும் திருகோவில் சென்று வீட்டருள் பெரும்பொருள் மெல்லடி நினைந்து பூமாலை புனைதல் வரை சீலம். போற்றி என்னும்வரை நோன்பு. ஆதி என்னும்வரை செறிவு. அலருநில் என்னும்வரை அறிவு என ஒருபுடையாகக் கொள்க.

கூ. ஐந்தொழில்

உலகிடைத் தொழில், இடம் பொருள் காலம் ஏவலர் முதலிய துணைகொண்டு நிகழ்வது. அத்தொழில் பெரும்பான்மைபற்றி உணர்வு உடல் என இருவகைப்படும். எத்தொழிலும் உருவாய்த் திருவுற நிகழும் இடம் அம்பலம் என்ப. அவ் அம்பலமும் அகம் புறம் என இருவகைப்படும். அகம் நெஞ்சத்தாமரை. புறம் வரையறைப்பட்ட வனப்புறு வைப்பு. தொழில்கள் நெஞ்சத்தின்கண் நினைவாய், நாவின்கண் மொழியாய், மெய்யினால் அழியா உருவுடைப் பொருளாய் நிகழ்கின்றன. ஆண்டவன் மன்னுயிர்களின் பொருட்டுத் திருவைந்தொழில்களை அருளை மருவி இடையறாது புரிகின்றனன். அவ்வருளும் அவனன்றி யில்லை. அவனும் அருளின்றி யில்லை. இவை உடலுயிர்போல் உள்ளன. அவன் செய்யும் ஐம்பெருந்தொழிலும் திருவுள்ளக் குறிப்பால் நிகழ்கின்றன. நாம் செய்யும் செய்கைகள் எல்லாம் கருவியின் துணைகொண்டு செய்யப்படுவன. நமக்கும் பிறர்க்கும் பிற உயிர்கட்கும் பயனாவன. செயப்படுபொருள் நம்மில் வேறாவன. ஆண்டவன் புரியும் ஐந்தொழிலும் ஆருயிர்களின் பொருட்டேயாம்.

அவை, படைத்தல் காத்தல் துடைத்தல் மறைத்தல் அருளல் என ஐவகைப்படும். அவன் உயிர்களுடன் கலப்பால் (அன்பு) ஒன்றாய், பொருள் தன்மையால் (அறிவு) வேறாய், உதவுதல் தன்மையால், (ஆற்றல்) உடனாய்ப் பின்னி நிற்கின்றனன். இப்பின்னல் தன்மையினையே புணர்ப்பு என்ப. அத்துவிதம் என்பதும் இதுவே. இப் புணர்ப்பினை மெய்ம்மையாகக் கண்டு உலகுக்கு உள்ளவாறுணர்த்தி உய்பக்கொண்டவர் நம் மெய்கண்டதேவரே யாவர். இவ் வுண்மையினை,

> "பொய்கண்டார் காணாப் புனிதமெனும் அத்துவித
> மெய்கண்ட நாதனருள் மேவுநாள் எந்நாளோ."
>
> —உ. குருமரபின் வணக்கம், ச.

எனத் தாயுமானத் தவச்செல்வர் தந்துரைத்தருளினர்.

மெய்கண்டார் சிவஞானபோதம் இரண்டாம் நூற்பாவின்கண் "அவையே தானே ஆய்" என்றருளிச் செய்தனர். இதனை இரட்டுற மொழிந்து மெய்யுரை கண்டருளியவர் சிவஞான

முனிவரனார் ஆவர். அவையேஆய் கலப்பு, தானேஆய் வேறு, அவையேதானேஆய் உடன் என உணர்த்தினர். உடலுயிர் போல் கலப்பு, கண்ணருக்கன்போல் பொருள்,. கண்ணொளியும் ஆன்ம அறிவும்போல் உடன் எனக் காண்க. வேறுரோப்பில் உணர்த்தின் பள்ளியிருக்கை கலப்பு. ஆசான் மாணுக்கர் வேறு. ஓதுந் தொழில் உடன். இங்ஙனமே புணர்ப்பு (அத்துவித) உண்மையை உணர்ந்துகொள்க.

அ. படைத்தல்: உயிர்கள் தொன்மையே மலமறைப்பால் அறிவு விளங்காது ஒளிபெறு விழிபோல் காரிருளில் கிடந்தன. கண்ணிலானுக்குக் கண்ணுடையான் துணையாவது கடமைபோல் இயல்பாகவே பாசங்களினின்றும் நீங்கிய இறைவன் துணைசெய்யத்திருவுள்ளங்கொண்டனன். கொண்டு தனக்கு வைப்பாற்றலாக விளங்கும் மாயையினின்றும் உலகு உண் பொருள் உடல்களைப் படைத்து உதவினன். அப் படைத்தற்றொழிற்கு முதற் காரணம் மாயை; துணைக்காரணம் திருவருளாணையும் இருவினையுமாகும். வினை (பொருட்டு) முதற்காரணம் தான்.

ஆ. காத்தல்: தன்னால் படைக்கப்பட்ட உலகம் கால எல்லைவரை பழுதின்றி முழுநலத்துடன் நிற்றற்கு அருளல்.

இ. துடைத்தல்; அவ்வுலகுடல்களை அவ்வவற்றின் கால எல்லையில் தோன்றுதற்கு இடனுயிருந்த காரண மாயையின் கண் ஒடுக்குதல். இம்மூன்றும் அறிவில் பொருள்களின்கண் நிகழ்வன. இதனை மெய்கண்டார் "அவன்அவள் அது எனும் அவைமூ வினைமையின்" என்னும் முதற் சூத்திரன்கண் அருளிச் செய்துள்ளனர். இவை உடலைப் பற்றியமையால் வரம் பெற்று அருளால் நிகழ்த்தும் ஆருயிர் இனத்தராம் அயன் அரி அரன் என்னும் முத்தேவர்களைக்கொண்டும் செய்விப்பன். இது புண்முதலிய நோய்களைக் கருவியிட்டாற்றும் மருத்துவர்தலைவன் உடனுழைச்செல்வாரை (Compounder)க் கொண்டு புண்ணினைக் கழுவித் தூய்மைப்படுத்தல், கருவியிட்டாற்றியபின் மருந்துவைத்துக் கட்டல், முற்றுக ஆறியபின் வீட்டுக்குச்செல்லத் துணைபுரிதல் போன்றுகும்.

ஈ. மறைத்தல்: உயிர்கள் வினைப்பயனைத் துய்க்குங்கால் குணங் குற்றங்களை மறைத்துக் 'கடுத்தின்னுதானைக் கட்டி பூசித் தீற்றும் முறைமைபோல்' துய்ப்பித்தல். இக் கருத்துப்பற்றியே ஆளுடையபிள்ளையார் திரு ஆலவாய்த் திருப்பதிக்கண் சிவ ஒளிமிக்கு அமணிருள் அகன்ற செவ்விக்கண் பாடியருளிய 'வீடாலால வாயிலாய்' என்னும் திருநெறித் தமிழின்கண் இறை உயிர் தளை என்னும் பெருண்மைசுட்ட முதல் மூன்றனுள்

மூன்றும் திருப்பாட்டில் "குற்றம்நீ குணங்கள்நீ கூடலால வாயி லாய்" என்றருளிச் செய்தனர்.

௨. அருளல்: இருவினை யொப்பு, மலமகல் செவ்வி, அருளோங்கு பண்பு, குருவுருத் தோற்றம், 'செந்தமிழ்கொண்டு இசைபாடு ஞானம், (தீக்கை) திருவைந்தெழுத் தெண்ணல், இறைபணி நிற்றல், அடியின்பம் ஆர்தல் முதலியன நிகழ்வித் தல். இவ்விரண்டும் உயிர்களின் அறிவின்கண் நிகழ்வன. அதனால் இவற்றைத் தானே புரிவன் முதல்வன். மேலும் இவை யிரண்டும் உலகியல் வழியும் வீட்டியல் வழியும் என இருவேறு வகைப்படும். வழியைக் காலெனவும் வழங்குவர். தொழிலைக் கை எனவும் வழங்குவர்.

அகத்து முப்பத்தாறு மெய் (தத்துவம்) யும் 'மண்முதல் நாளம்' என்னும் மெய்கண்டார் திருமொழிப்படி அமைந்துள்ள நெஞ்சத் தாமரையின்கண் இடையறாது நடிக்கும் அம்பல வாணன், புறத்து உடலகத்து நாப்பணும் நெஞ்சம்போன்று உலக நாப்பணும் தில்லையின்கண் நடித்தருளுகின்றனன். அந் நடிப்பில் முத்தொழிலைத் திருக் கைகளின்கண்ணும், இருதொழி லைத் திருக்காலின்கண்ணும் குறித்தருளுகின்றனன். இவ் வுண்மை மெய்கண்டார் மாணவருள் ஒருவராகிய மனவாசகம் கடந்தார் அருளிய உண்மை விளக்கம் முப்பத்தைந்தாம் திருப் பாட்டில் செம்மையுறக் காணலாம். அது வருமாறு:

"தோற்றம் துடியதனில் தோயும் திதிஅமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்—ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தில் உற்றதிரோ தம்முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு."

இதன்கண் தோற்றம் படைப்பு. திதி காப்பு. சங்காரம் துடைப்பு. இம்மூன்றும் முறையே வலக்கை உடுக்கினாலும், வலக்கை 'என்று வந்தாய் என்னும் குறிப்பினாலும்', இடக்கைத் தீயினாலும் காட்டப்பெறுவன.

திரோதம் மறைப்பு. முத்தி அருளல். இவை ஊன்றிய வலத் திருக்கால் எடுத்த இடத் திருக்கால்களால் காட்டப் பெறுவன. இதன்கண் சைவ சித்தாந்த மெய்ம்மை ஒன்று உய்த்துணர்வார்க்குப் புலனும்வண்ணம் அமைந்துள்ளது. அஃது எடுத்த பொற்பாதத்தைத் தொடுத்துச் சுட்டிக்காட்டு வது வீசும் இடத் திருக்கையேயாகும். இடப்பால் திருவருட் கூறு. வீடு பேற்றின்கண்ணும் உயிர்க்குள்ள அன்பு அறிவு ஆற் றல்கள் (இச்சை, ஞானம், கிரியை.) நிகழும் என்பதே. அது வழியாகிய திருக்காலுடன் செயலாகிய திருக்கையும் சேர்ந்

திருப்பதால் காணலாம். இவ்வுண்மை மெய்கண்டார் அருளிய பதினோராம் சூத்திரத்து "அயரா அன்பின் அரன்கழல் செலுமே" என்னும் அருள்திருத்தொடரால் விளங்கும். அயராமை அறிவின் செயல், அன்பு அன்பின் செயல், அரன்கழல் செல்லுதல் ஆற்றலின் செயல்.

௬. அறுபகை

ஆணவத்தின் சிறப்பு பொது இரண்டு, வினை இரண்டு, மாயை உடல் மெய், உணர்வு மெய் என இரண்டு ஆக ஆறும் பகையாகும். மெய் எனினும் தத்துவமெனினும் ஒக்கும்.

ஆணவத்தின் சிறப்புத்தன்மை அறிவை மறைப்பது. பொதுத்தன்மை உயிர்கருவிகளுடன் கூடிய்வழி அக் கருவியின் வாயிலாகத் திரிபுணர்ச்சியைச் செய்து ஐம்பாட்டின்கண் அழுத்துவது. ஐம்பாடு நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படங்கல் என்ப. இவற்றைச் சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் எனவும் கூறுப. இவற்றிற்குரிய இடங்கள் முறையே புருவநடு, கழுத்து, நெஞ்சம், கொப்பூழ், மூலம் என்ப. இங்குக் கூடும் கருவிகள் முப்பத்தைந்து, இருபத்தைந்து, மூன்று, இரண்டு, ஒன்று என்ப. இக்கருவிகளின் பெயர் புலன் பத்து, பொறி பத்து, வளி பத்து, எண்ணம் மனம் எழுச்சி இறுப்பு (புத்தி) ஆகிய அகப்புறக்கருவி நான்கு, ஆள் (புருடன்) ஒன்று ஆக முப்பத்தைந்து. பொறி பத்தும் நீங்க ஏனைய இருபத்தைந்து. எண்ணம் உயிர்வளி (பிராணவாயு) ஆள் மூன்று. உயிர்வளி ஆள் இரண்டு. ஆள் ஒன்று. இவ்வுண்மை மெய்கண்டார் அருளிய நான்காம் நூற்பா மூன்றும் அதிகரணத்துக் காணும் "ஒன்றணையா" என்னும் வெண்பாவால் உணர்க.

திரிபுணர்ச்சி மருள். இதன் காரியமாக ஏற்படுவன செருக்கு, விழைவு, கவலை, வெப்பம், வாட்டம், வியப்பு என ஆறாகும். இவ்வேழும் மூலமலத்தின் காரியம் என்ப. இவற்றை மோகம், மதம், அராகம், கவலை, தாபம், வாட்டம், விசித்திரம் எனக் கூறுப. இவ்வுண்மை மெய்கண்டான் நூல் இரண்டாம் நூற்பாவின் பேருரையிற் காண்க. இவ்வாணவம் கால எல்லையில் நீங்கும் பல்வேறு ஆற்றல்களையுடையது. ஆற்றல் அழியும். ஆணவம் அழியாது. வீட்டுயிர்களை விட்டகலும்.

**வினை**, தொன்மை வினையும் தொடக்க வினையும் என இருவகைப்படும். தொன்மை வினை ஆதிப்படைப்பில் பரமன் அருளால் பல்லுயிர்க்கும் ஆணவ ஆற்றல்களின் வன்மை மென்மைக்குத் தக்கவாறு தேய்த்து மாயக்கப் பருவுடலை நல்கத் திரு

வுள்ளங்கொண்டனன் அப்பருவுடலை நல்கியருள வினைவாயிலை நாடினன். அதன்பொருட்டு எல்லாவுயிர்களுக்கும் வேற்றுமையின்றி ஒன்றுபோல் நுண்ணுடலை நல்கினன். நுண்ணுடல் என்பது பூதமுதலாகிய சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னும் தன் மாத்திரை ஐந்தும், மனம், எழுச்சி (ஆங்காரம்) அறிவு (புத்தி) என்னும் அகப்புறக் கருவி மூன்றும் ஆக எட்டு மெய் கூடியதாகும். இவ்வுடலுடன் உயிர் பொருத்தப்பட்டதும் மனத்தின்கண் தொன்மை வினையை மன்னவைத்தனன். தொன்மை வினை என்பது, வினைத்தன்மை. மேல் வினை நிகழ்வதற்குத் துணையா நிற்கும் வினைமை. அரிசி வேவுதற்கும், மட்டை நாருரித்தற்கும் நீர் துணையாவதுபோன்று உயிர்கள் இருவினைகளைச் செய்யத் தொன்மை வினை துணையாகும். தொழில்களுக்கு வேண்டத்தக்க துணைக்கருவியின்கண் அமைந்திருக்கும் தன்மையும் தொன்மை வினைக்கு ஒப்பாகும்.

இவ்வுண்மை ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியத்து வினை நிகழ்ச்சிக்கு வேண்டும் காரணம் எட்டனுள் வினையும் ஒன்றாகச் சேர்க்கப்பட்டதாலும் விளங்கும். அந் நூற்பா வருமாறு:

"வினையே செய்வது செயப்படு பொருளே
நிலனே காலங் கருவி யென்றா
இன்னதற் கிதுபய னாக வென்னும்
அன்ன மரபின் இரண்டொடும் தொகைஇ
ஆயெட் டென்ப தொழின்முதல் நிலையே."

—தொல். சொல் - ககஉ.

ஈண்டு முதல்நிலை என்பது காரணநிலை என்றாகும். வினைத் தொன்மை மனத்தொடு பொருத்தியதும் மனம் புடைபெயர்ந்து மலத்துக்கீடாக வினைநோக்குற்றது. அவ்வினை நிகழ்தற்கு உடல் உறுப்பு உலகெலாம் ஐம்பூதக் கூட்டரவால் அமைத்தருளினன். இது வழிபட, உண்ண, உழைக்க, உறவாட, உறங்க, களிக்க, கழிக்க முதலிய செயல்களுக்கு வெவ்வேறு உறையுள் அமைப்பதுபோன்றாகும்.

மருள் முனைப்பால் செய்யும் இருவினை உயிரைப்பற்றிப் பிறப்பிற் புகுத்தும். அருள் முனைப்பால் செய்யும் இருவினை இறையைப்பற்றி வீட்டிற் புகுத்தும். வீட்டில் உடைத்துண்ணும் தேங்காய் பழம் ஊணாய் உடலோடொழியும். அவற்றையே இறைவன்முன் படைத்து இறைபணியாய் உண்ணின் உயிரொடு பொருந்தி உண் மாசு கழுவி அண்ணலடி நண்ணுவிக்கும். இவற்றால் மேல்வற்றை விளங்கிக்கொள்க. வினையின் விளக்கம் மெய்கண்டார் இரண்டாம் நூற்பாவிற் காண்க.

மாயை உடல் மாயை (மூலப்பகுதி) உணர்வு மாயை (தூவா மாயை) என இருவகைப்படும். உணர்த்து மாயை (தூமாயை) மும்மலத்தார்க்கு மற்றிரு மாயைகளுடன் விரவிநின்று உதவுவ தன்றி உடலாவதின்று. இத் தூமாயையினின்றும் நாலோசை தோன்றும். இந்நாலோசையும் நுண்ணோசை, நினைவோசை, மிடற்றோசை, செவியோசை எனப் பெயர்பெறும். இவற்றைச் சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி எனக் கூறுப. இவ் வோசை சொல்லுருவாய்ப் பொருளை உணர்த்துவதோடு ஒளியுரு வாய் வன்னம் பதம் மந்திரம் எனத் தோன்றியும் உதவும்.

உடல்மெய் (ஆன்மதத்துவம்) இருபத்துநான்கு. அவை பூதம் ஐந்து, பூதமுதல் ஐந்து, அறிகருவி ஐந்து, செய்கருவி ஐந்து, மனம் எழுச்சி இறுப்பு மூன்று, குணம் ஒன்று என்ப. பூதம் ஐந்து, நிலம் நீர் நெருப்பு உயிர் (காற்று) விசும்பு. பூத முதல் ஐந்து நாற்றம் சுவை ஒளி ஊறு ஓசை. அறிகருவி ஐந்து மெய் வாய் கண் மூக்குச் செவி. செய்கருவி ஐந்து வாய் கால் கை எருவாய் கருவாய்.

உணர்வுமெய் வித்தியாதத்துவம் எனப்படும். இஃது ஏழு பிரிவாம். அவ்வேழும் காலம் ஊழ் (நியதி) ஆற்றல் (கலை) அறிவு (வித்தை) அன்பு (அராகம்) ஆள் (புருடன்) தூவாமாயை என்ப. இவை நுண்ணுடல் உள்ளால் சட்டைபோன்று உயிரை ஒட்டியிருப்பது. இவை அகக் கருவி எனவும் பெயர்பெறும்.

உடல்மெய் உணர்வுமெய் ஆகிய இரண்டும் உயிரின்கண் மருள் முனைத்திருக்குங்கால் மயக்கத்துக்கு ஏதுவாகும். இது முழுகாதிருக்கும் உடலும், அழுக்ககலா ஆடையும், வழுக்கிவீழ் மாந்தர் சேர்க்கையும், இழுக்கலுழியும், மாலைப்பொழுதும் போன்று மயக்கத்திற்கு ஏதுவாகும்.

இவையே உயிரின்கண் அருள் முனைத்திருக்குங்கால் தெரு ளுக்கு வாயிலாகும். இது மெய்கண்டார் நான்காம் நூற்பா இரண்டாம் அதிகரணத்து,

"மாயா தனுவிளக்காம் மற்றுள்ளம் காணாதேல்
ஆயாதாம் ஒன்றை அதுவதுவாய்"

என அருளிய திருமொழியான் உணர்க.

உணர்த்துமெய் சிவதத்துவம் எனப் பெயர்பெறும். இம் மெய் ஐந்து வகைப்படும். அவை அறிவு (சிவம்) ஆற்றல் (சத்தி) அன்பு (சதாசிவம்) ஆட்டல் (ஈசுரம்) ஊட்டல் (சுத்த வித்தை) என்பன. இவை ஐந்தும் ஆண்டவன் நேரே இயைந் தியக்கும் நிலைக்களன்களாகும்.

இவற்றுனும் ஏனைத் தூய முப்பத்தொரு மெய்களாலும் யாக்கை பெற்றுத் திகழ்வார் வீட்டுயிர் இனத்தாரும், இயற்கையிலேயே ஒரு மல இரு மலமுடையாரும், செயற்கையிலேயே ஒரு மல இரு மலமுடையாரும், சீகண்டர் அனந்தர் முதலிய நிலைகளை எய்தினுரும் பிறரும் ஆவர். இவர்கள் உடல் தூயவுடல்.

இவற்றைத் தொகுக்குங்கால் உடல்மெய் இருபத்துநான்கு, உணர்வுமெய் ஏழு, உணர்த்துமெய் ஐந்து ஆகமெய் முப்பத்தாறென்ப. மெய்கண்டார் மூன்றும் நூற்பாவின்கண் "மாயா வியந்திர தனுவினுள் ஆன்மா" என வரையறை செய்துள்ளனர்.

மேலும் திருமூலரும்,

"ஆகின்ற தொண்ணூறோ டாறும் பொதுஎன்பர்
ஆகின்ற ஆறு றருஞ்சைவர் தத்துவம்
ஆகின்ற நாலேழ்வே தாந்தி வயிணவர்க்கு
ஆகின்ற நாலாறு ஐயைந்துமாயா வாதிக்கே."

—திருமந்திரம் ௨௧௭௪.

எ. எழ்பிறப்பு

நிலைத்திணையன, ஊர்வன, அமரர், நீர் உறைவன, பறப்பன, நாற்காலின, மக்கள் என எழுவகைப்படும் உயிர்கள் உடலொடு பொருந்தித் தோன்றும் தோற்றம். இவ்வேழனுள்ளும் மக்கள் பிறப்பே பாழ்த்த பிறப்பறுத்திடும் காழ்த்த பிறப்பாகும். அஞ்செழுத்தால் அரனை வழிபட்டுத் தஞ்சமென்றடைந்தாரைத் தலைமேற்றாங்கி இன்புறுத்தும் செஞ்சடைச் சிவபெருமானை எய்துதற்கு வாய்ப்பான பிறப்பாகும். தலைமேற்றாங்குதல்—தலையன்பால் தலையளி செய்தல். இது மெய்கண்டார் நூற்பாப்பத்து - அதிகரணம் இரண்டில் "சார்ந்தாரைக் காத்தல் தலைவர் கடனுதல்" என்னும் திருமொழியான் உணரலாம்.

இவ்வெழுவகைப் பிரிவும் சிவப்பிரகாசம் ௩௭ "தோற்றியிடும்" என்னும் திருவிருத்தத்தில் கண்டுகொள்க. உயிர்கள் ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலத்தாலும் பிணிப்புண்டவர்கள் மும்மலத்தர். ஆணவம் கன்மம் என்னும் இரு மலத்தால் பிணிப்புண்டவர்கள் இருமலத்தர். ஆணவத்தால் மட்டும் பிணிப்புண்டவர்கள் ஒருமலத்தர். ஒருமலத்தர் இருமலத்தர் மலஆற்றலின் மென்மைக்குத் தக்கவாறு இயற்கையிலே உள்ளாரும் உளர். மும்மலத்தினின்றும் செயற்கையால் விடுபட்டு அங்ஙனம் உள்ளாரும் உளர். இவர்கள் விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர் என வழங்கப்பெறுவர். விஞ்ஞானகலர் அறிவு முதிர்ச்சியால் இருகட்டற்றவர். பிரளயாகலர் ஊழி ஒடுக்கத்தால் ஒருகட் டற்றவர்.

இவர்கட்கு ஆண்டவன் குருவாயுணர்த்துமுறை தன்மை, முன்னிலை, படர்க்கை என முத்திறப்படும்.

ஒருமலத்தார்க்கு அறிவுக்கு அறிவாய் ஆண்டவன் உண்ணின்றவாறே உணர்த்துவன். இது தன்மை. இருமலத்தார்க்கு நாற்றோளும் முக்கண்ணும் கறைமிடறும் முதலாய திருவருளுருவில் முன்னிலைப்பட்டு உணர்த்துவன். இது முன்னிலை. மும்மலத்தார்க்கு மெய்கண்டார் அனைய அறிவுத் திருவுருவத் தகம்நிறை குருவாய், காண்டல் தீண்டல் கருதல் மொழிதல் முதலிய தீக்கைச் செய்கையால் உணர்த்துவன். இது படர்க்கை. இவ்வுண்மை மெய்கண்டார் எட்டாம் நூற்பா இரண்டாம் அதிகரண முதல் திருப்பாட்டால் விளங்கும். அது வருமாறு:

"மெய்ஞ்ஞானந் தானே விளையும்விஞ் ஞானகலர்க்கு
அஞ்ஞான அச்சகலர்க் கக்குருவாய்—மெய்ஞ்ஞானம்
பின்னுணர்த்தும் அன்றிப் பிரளயா கலருக்கு
முன்னுணர்த்தும் தான்குருவாய் முன்."

எழுவகைப் பிறப்பினுள் அமரர் எனப்படுவார் 'வானிடத்தவரும் மண்மேல் வந்தரன் தனைஅர்ச்சி'க்கும் ஊனுடை உடம்பினரே யாவர். இது, திருநாவுக்கரசு நாயனார் பாடியருளிய

"துறக்கப் படாத உடலைத் துறந்துவெந் தூதுவரோடு
இறப்பன் இறந்தால் இருவிசும் பேறுவன் எறிவந்து
பிறப்பன் பிறந்தால் பிறையணி வார்சடைப் பிஞ்ஞன்பேர்
மறப்பன்கொ லோவென்றென் உள்ளங் கிடந்து மறுகிடுமே."

—திருமுறை ச. கக௪ - அ.

என்னும் திருவிருத்தத்தால் இனிது விளங்கும். இதன்கண் இருவிசும்பு என்பது துய்த்துக்கழியும் ஒளியுலகும் இருளுலகுமாகும்.

அ. எண்குணம்

பேரொடுக்க முதல்வனாகிய முழுமுதல்வன் 'சிவனெனும் நாமந் தனக்கே யுடையசெம் மேனிஎம்மான்.' அவன் எண்பெருங் குணங்களையுடையவன். இவ்வுண்மை, தெய்வத் தமிழ்ப் பொதுமறை யருளிய நாயனார் கடவுள் வாழ்த்து ஒன்பதாந் திருக்குறளில்,

"கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை."

என்றருளிச் செய்தனர். இதற்கு உரைகண்ட பரிமேலழகியார்,

என்குணங்களாவன தன் வயத்தனுதல், தூயவுடம்பின னுதல், இயற்கை யுணர்வினனுதல், முற்றுமுணர்தல், இயல் பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்ற லுடைமை, வரம்பிலின்பமுடைமை எனவிவை. இவ்வாறு சைவாகமத்துக் கூறப்பட்டது என வரைசெய்துள்ளார்.

இவ் எண்குணங்களும் ஒரு புடை பொப்பாகத் திருநாவுக் கரசு நாயனுர் அருளிய :

"இருநிலனய்த் தீயாகி நீரு மாகி
இயமான னுயெறியுங் காற்று மாகி
அருநிலைய திங்களாய் ஞாயி ருகி
ஆகாச மாயட்ட மூர்த்தி யாகிப்
பெருநலமும் குற்றமும் பெண்ணும் ஆணும்
பிறருருவும் தம்முருவும் தாமே யாகி
நெருநலையாய் இன்ருகி நாளை யாகி
நிமிர்புன் சடையடிகள் நின்றவாறே."

—திருமுறை, சு. ருOஅ - க.

என்னுந் திருத்தாண்டகத்துள் காணலாம். அவை, உலகைப் படைக்கும் ஆற்றலுள்ள ஒரு முழுமுதலே தன்வயத்தனுதல் சாலும். அங்ஙனமே தீவண்ணமே தூயவுடம்பும், திருவருள் உருவாம் நீரே இயற்கையுணர்வும், மன்னுயிர்த் தொகுதி யுடன் பின்னிச் செலுத்தும் திருவுள்ளமே முற்றுணர்வும், எறியுங் காற்றே பாசங்களினீங்குதலும், திங்களே பேரருளுடை மையும், ஞாயிறே முடிவிலாற்றலுடைமையும், ஆகாசமே வரம் பில் இன்பம் உடைமையும் குறிக்கும் குறிப்பாகும்.

இவ் எண்பேருருவ வழிபாடு தொன்றுதொட்டுச் சித்தாந் தச் செந்நெறியாளர்க்கே உரியதென்பது ஈராயிரம் யாண்டை அடுத்துள்ள சங்கச் சான்ருேராக்கிய மணிமேகலைக்கண் :

அசு. நின்ற சைவ வாதிநேர் படுதலும்
பரசுநின் தெய்வம் எப்படித் தென்ன
இருசுட ரோடிய மானனைம் பூதமென்
கூO. றெட்டு வகையும் உயிரும் யாக்கையுமாய்க்
கட்டிநிற் போனும் கலையுருவி னேனும்
படைத்துவிளை யாடும் பண்பி னேனும்
துடைத்துத் துயர்தீர் தோற்றத் தோனும்
தன்னின் வேறு தாமென் றிலோனும்
கூரு. அன்னேன் இறைவன் ஆகுமென் றுரைத்தனன்."

என்ற மெய்ம்மை மொழியால் விளங்கும்.

நம் மெய்கண்டாரும் ஒன்பதாம் நூற்பா இரண்டாம் அதிகரணத்து "நிர்க்குணனுய்" என்னும் வெண்பாவில் மறுதலை முகத்தான் எண்குணங்களையும் வலியுறுத்தி அருளினர்.

கூ. ஒன்பானுரு

ஆண்டவன் ஆற்றும் அருள் திருத்தொழில்களின் விரிவு ஒன்பதாய் அடங்கும். அவ்வொன்பதன் நிலைக்களமும் ஒன்பதாகும். அந்நிலைக்களங்களின் நுண்மை பருமை பொதுமை பற்றி அருவம் உருவம் அருவுருவம் என முத்திறப்படும். அவற்றுள் சிவம், சத்தி, நாதம், விந்து ஆகிய நான்கும் அருவம். சதாசிவன் ஒன்றும் அருவுருவம். ஈசன், உருத்திரன், மால், அயன் நான்கும் உருவம்.

இவை முறையே அறிவு, ஆற்றல், அறிவுத் தோற்றம், ஆற்றல் தோற்றம், அன்பு, அறிவுரு, ஆற்றலுரு, அறிவுச் செயல், ஆற்றற் செயல் எனக் கூறலாம். இவ்வொன்பான் நிலையும் மெய்கண்டாரின் தலைமாணுக்கர் அருளிய சிவஞான சித்தியார் இரண்டாம் சூத்திரம் நான்காம் அதிகரணம் இரண்டாம் திருப்பாட்டிற் காணலாம். அது,

"சிவம்சத்தி நாதம் விந்து சதாசிவன் திகழும் ஈசன்
உவந்தருள் உருத்தி ரன்தான் மால்அயன் ஒன்றி னென்றாப்
பவந்தரும் அருவ நாலிங் குருவநால் உபய மொன்றாய்
நவந்தரு பேதம் **ஏக நாதனே** நடிப்பன் என்பர்."

கா0. பதின் ஆக்கம்

இறை உயிர் தளை மூன்றனையும் சார்பு நிலையாம் பொதுமையினும், உண்மை நிலையாம்சிறப்பினிலும் ஆண்டவன் அருள் துணையால் ஆய்ந்து நன்மை கடைப்பிடித்தல் பதின் ஆக்கம் ஆகும். பதின் ஆக்கம் எனினும் தசகாரியம் எனினும் ஒக்கும்.

இறையைப்பற்றிக் காண்டல், கருதல், கலத்தல், கனிந்து இன்புறுதல் என நான்காம். இவற்றைச் சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவபோகம் என்பர்.

உயிரைப்பற்றிக் காண்டல், கருதல், கைக்கொள்ளல், என மூன்றும். இவற்றை ஆன்மரூபம், ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி என்ப. இவ்வுருவ தரிசன சுத்திகளைச் சிவஞான முனிவரனுர் திரியக்காண்டல், இரட்டுறக்காண்டல், தெளியக் காண்டல் எனத் தம் பேருரைக்கண் வரைசெய்தருளினர்.

தளையைப்பற்றிக் காண்டல், கருதல், கைக்கொள்ளல் என மூன்றும். இப்பத்தும் மெய்கண்டார் தம் மாணுக்கரின்

மாணாக்கராகிய உமாபதிசிவநாயனார், தாம் அருளிச்செய்த சிவப்பிரகாசம் முதலிய எண்பெரும் நூற்களுள் ஒன்றாகிய உண்மை நெறி விளக்கத்து ஆறு செய்யுட்களான் அருளியுள்ளனர்.

இவைதம்மையே மெய்கண்டான் நூலுடன் ஒருபுடையாக வைத்து முதல் சூத்திரமும் இரண்டாம் சூத்திரமும் தனையைப் பற்றிய காண்டலாகவும், மூன்று நான்கு ஐந்து கருதலாகவும் ஆறு கைக்கொள்ளலாகவும் அமையும்.

ஏழாம் சூத்திரம் உயிரின் காண்டலாகவும், எட்டாம் சூத்திரம் கருதலாகவும், ஒன்பதாம் சூத்திரம் கைக்கொள்ளலாகவும் அமையும்.

எட்டாம் சூத்திரம் இறையின் காண்டலாகவும், ஒன்பது கருதலாகவும், பத்து கலத்தலாகவும், பதினொன்று கனிந்தின்புறலாகவும் அமையும்.

கக. அணைந்தோர் தன்மை

ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்களையும் அருள்நினைவால், அடியார் இணக்கத்தால், ஆண்டவன் வழிபாட்டால் அறக்களைவர். கொல்லாமை, ஐம்பொறியடக்கல், பொறுமை, இரக்கம், அறிவு, வாய்மை, தவம், அன்பு என்னும் எண்பெரும் நற்பண்புகளும் எய்தப்பெற்று இடையறாது தொழுகுவர். 'வீழ்நாள் படாஅமை நன்றாற்றி, வாழ்நாள் வழியடைத்து, எண்குணத்தான் தாளைத் தலை'க்கூடி இன்புறுதலே சைவ சித்தாந்த அடிப்படைக் கொள்கையாம். இவை,

"செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா
அம்மலம் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரனெனத் தொழுமே."

என்னும் மெய்கண்டான் நூல் பன்னிரண்டாம் சூத்திரத்தால் இனிது விளங்கும்.

மெய்கண்டார் செய்ததமிழ் நூல்தலைமேற் கொள்ளவரும்
பொய்யிலா மெய்யின்பம் போற்று.

---

# மெய்கண்டான்நூற் கரு

“ ஈறாய்முதல் ஒன்றாயிரு பெண்ஆண்குண மூன்றாய்
மாறாமறை நான்காய்வரு பூதம்மவை ஐந்தாய்
ஆறார்சுவை ஏழோசையொ டெட்டுத்திசை தானாய்
வேறாயுடன் ஆனானிடம் வீழிம்மிழ லையே.”

—ஆளுடைய பிள்ளையார், க. கக - உ.

“ தேவர் குறளும் திருநான் மறைமுடிவாம்
மூவர் தமிழும் முனிமொழியும்—கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்.”

—ஔவையார் நல்வழி - ௩0.

“ வேதம் பசுவதன்பால் மெய்யா கமம்நால்வர்
ஓதும் தமிழதனின் உள்ளூறுநெய்—போதமிகு
நெய்யின் உறுசுவையாம் நீள்வெண்ணெய் மெய்கண்டான்
செய்ததமிழ் நூலின் திறம்.”

வேதம் - திருக்குறள். ஆகமம் - திருமூலர் திருமந்திரம்

சிறப்பு

மூவுயிர்கள் என்றும் முதல்வன் அடிதொழுஞ்சீர்
மேவ முதல்ஈறாய் மெய்கண்டார்—தாவில்
‘அவனவள் அஃதென் அவைதொழும்’ என்றே
சிவஞான போதஞ்செய் தார்.

செம்பொருள் துணிபு

ஒன்றால் உயிர்கள் உலகம் உணர்ந்தியங்கும்
நன்றாக ஈரிடத்தும் நாம்அடிமை—பொன்றாவே
தோன்றுமொடுங் கும்மாயை சொல்ஐந்தால் வீடுண்டாம்
தோன்றுமிடம் மூன்றில் தொழு.



சித்தாந்த வகுப்புத் திருக்காட்சி

# நெல்லைச் சித்தாந்த வகுப்பு நிகழ்ச்சிகள்

### திருமடச் சிறப்பு

இவ்வகுப்பு, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் அற நிலையமாகிய தென்னிந்திய சைவ சித்தாந்த சங்கத்தாரால் நடத்தப்பெற்றுள்ளது. திருநெல்வேலிச் சந்திப்பு, சிந்துபூந் துறை—தருமபுர மடாலயத்தில், அங்கு நடைபெறும் தருமை யருள்பெறு நெல்லை அருணகிரி இசைக்கழகத்தாரின் அருந் துணையுடன் இவ்வகுப்பு நடைபெற்றது. தெய்வக் கவிஞராகிய குமரகுருபரர் இருந்து தமிழ் வளர்த்த இடம் நெல்லைத் தருமபுர மடம். வெள்ளியம்பலத் தம்பிரான் வீற்றிருந்து, சிவப்பிரகாசர் போன்ற தவப்பெரு மாணவர்கட்குக் கலக்கமில் இலக்கண வறிவை யூட்டிய இடம் இந்த மடம். இன்றும் இடையறாது முத்தமிழும் முழங்கிக்கொண்டிருக்கும் வித்தக மன்றமாக விளங்குவதும் இந்த மடமே.

### தொடக்கத் தலைவர்

சித்தாந்த வகுப்பை முதல்நாள் தொடங்கிவைத்த பெரியார் அம்பாசமுத்திரம் வழக்கறிஞர் திரு. கே. ஏ. சிவஞானம் பிள்ளை யவர்கள். அவர்கள் சிவஞானமுனிவர் மரபில் பிறந்த சிறந்த தவப்பேறுடையார். அத்தகைய பெரியாரால் வகுப்புத் தொடங்கிவைக்கப்பெற்றது போற்றத்தக்க செய்தியேயாகும்.

### சித்தாந்த ஆசிரியர்கள்

தமிழும் சைவமும் தழைத்தோங்குதற்குக் காரணமாக விருந்த—இருக்கின்ற அருந்திறல் மடாலயத்தில் இச் சித்தாந்த வகுப்புத் தொடங்கப்பெற்றது ஒரு தனிச் சிறப்பேயாகும். இவ் வகுப்பை இனிது நடத்தும் ஆசிரியர்களாக விளங்கினோர் இரு பெரும் சித்தாந்த வல்லார்கள். சாத்தூர் வழக்குரைஞர்—சித் தாந்த சிரோன்மணி—உயர்திரு. தூ. சு. கந்தசாமி முதலியார், எம். ஏ., அவர்கள், சித்தாந்தப் பேராசிரியராக எழுந்தருளித் தமது தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகிய மும்மொழிப் புல்மையால் மேலைநாட்டுத் தத்துவக் கருத்துக்களுடன் ஒப் பிட்டுச் சைவசமயத் தத்துவங்களின் தனி மாண்பைத் திட்ப நுட்பமாக விளக்கினார்கள்.

27-4-52 ல் தொடங்கி 20-5-52 வரை நடந்த இவ் வகுப்பு, நாள்தோறும் முந்நேர நிகழ்ச்சிகளைக் கொண்டு முத்தமிழ்ச் சைவப் பெரு முழக்கம் செய்தது. காலை 9-30 மணி முதல் 11-30 வரை சித்தாந்தப் பேராசிரியர், திரு. தூ. சு. கந்தசாமி

முதலியார் எம். ஏ., அவர்கள், வகுப்பில் கலந்து கொண்ட மாணவ அறிஞர் அறுபதின்மருக்குச் சிவஞானபோதச் சிற்றுரையைப் பாடமாகக் கற்பித்தார்கள். மாலை 3-30 மணி முதல் 5-00 வரை, கழகப் புலவர், சித்தாந்த பண்டிதர், திரு. ப. இராமநாத பிள்ளையவர்கள் ஐயத்தெளிவு வகுப்பு நடத்தினார்கள். அந் நேரத்தில் கழகப்புலவர் அவர்கள், பாடச் சார்பாகவும் சமயத் தொடர்பாகவும் மாணவ அறிஞர்கட்கெழும் ஐயங்களைத் தெளிவுற விளக்கியருளினார்கள். மாணவர்களாகச் சித்தாந்த வகுப்பில் கலந்துகொண்ட அறிஞர்கள் எல்லோரும் நல்லிசைப் பெரும் புலவர்கள். இலக்கிய அறிவு நிரம்பப் பெற்றவர்கள். வித்துவான், பி. ஏ., எம். ஏ., பட்டம் பெற்ற பட்ட உரிமையர். சிறந்த சொல் வல்லார்கள். அத்தகைய அறிஞர்களையே வகுப்பு மாணவராகச் சைவசித்தாந்த சங்கத்தார் தேர்ந்தெடுத்திருந்தார்கள். ஒரு சிலர் சமய வுண்மைகளை நன்கு அறிந்தவர்களாகவும் இருந்தனர். இத்தகைய அறிவு நலம் பெருகிய அறிஞர்களாகிய மாணவர்கட்கு எழும் ஐயங்களை அகற்ற எத்துணை அகன்ற பேரறிவு பெற்றிருத்தல் வேண்டும் என்பதைக் கற்றறிந்தார் தெற்றென உணர்வர். கழகப் புலவர் அவர்கள் மாணவர் எழுப்பும் எந்த ஐயத்தையும் மிக எளிதாகத் தெளிவுபடுத்தும் திறங்கண்டு மாணவர் பெரிதும் வியந்தனர். அத்தகைய தமிழறிவும் சமய அறிவும் பெருகிய பெரும் புலவராக ஐயத்தெளிவாசிரியர் அமைந்தது அரிய பேறேயாகும்.

**பாடத் திட்டம்**

சிவஞானபோதச் சிற்றுரையை இருபத்தொரு நாட்களில் பாடமாக நடத்துதற்குப் பெருந்துணையாகப் பாடத்திட்டமொன்று கழகப் புலவர், திரு. ப. இராமநாத பிள்ளையவர்களால் உருவாக்கப்பெற்றது. சிவஞானபோதச் சிற்றுரையைப் பயில்வார்க்குத் துணை செய்யும் வகையில் சித்தாந்த பூடணம், வித்துவான் திரு. வே. மாணிக்கவாசகம் பிள்ளையவர்களால் 'சிவஞான போதச் சிற்றுரை அருஞ்சொற்பொருள் அகரவரிசை' என்னும் சின்னூலொன்று தொகுக்கப்பெற்றது. அந்நூல், சித்தாந்த வகுப்பில் பயின்ற மாணவர்க்கு மாணுற்ற துணையாக விளங்கி முட்டுண்ட இடங்களைத் தட்டுநீக்கித் தனிவழி காட்டியது.

**உணவு உறையுள் பெற்றார்**

இவ் வகுப்பில் கலந்துகொண்ட முப்பத்தைந்து மாணவர்க்குச் சங்கத்தார் உணவு உறையுள் வசதிகளைக் குறைவின்றி நல்கினர். மற்ற இருபத்தைந்து பேர்கள், தம் கைச்செலவில் வந்து பயின்றனர். அங்ஙனம் உரிய வசதியுடன் பயின்றார்

சிலர்க்கு, அவர்களது அறிவு அமைதி யொழுக்கச் சிறப்பு நலங் கண்ட சங்கத்தார், செலவுத் தொகையில் ஒரு பகுதியை நன் கொடையாக வழங்கி மகிழ்வித்தனர். அச்செயல் பெரிதும் போற்றற்குரியதாகும்.

### எழுச்சிச் செயல்கள்

நாள்தோறும் இரவில் 6-30 மணி தொடங்கி 7 மணி வரை தேவார இசை நிகழ்ச்சியும், 7 முதல் 9 மணி வரை சித்தாந்தச் சொற்பொழிவு நிகழ்ச்சிகளும் இனிது நடைபெற்றன. இடை யிடையே சிறுவர் சிறுமியர்தம் இசை, நடனம், உரையாடல், சிற்றுரை, இசைக் காட்சி முதலியன, சொற்பொழிவைக் கேட்க வரும் மக்களுக்கு மிக்க கிளர்ச்சியை உண்டுபண்ணி உவகை யோடு உறுதியும் ஊட்டின.

### மாணியார் திருநாள்

இவ் வகுப்புத் துவங்கிய 27-4-52 ல் மங்கையர்க்கரசியார் குருபூசைத் திருநாள் அமைந்தது மற்ருெரு தனிச்சிறப்பாகும். பாண்டிநாடெங்கணும் சைவம் குன்றிச் சமணம் நின்று பெருகியதோடன்றி மன்னனுகிய கூன்பாண்டியனும் சமணத் தைத் தழுவி யாதரித்தநாளில் பாண்டிமா தேவியாகிய மங்கை யர்க்கரசியார், மன்னர் குலநலம் பேணும் முதல்அமைச்சராகிய குலச்சிறையார் துணைகொண்டு, திருஞானசம்பந்தப் பெரு மானைத் திருமறைக் காட்டினின்றும் மதுரைமா நகருக்கு வர வழைத்துச் சமணரை அப்பெருமானுல் வாதில் வெல்லுவித்து, மன்னனையும் மக்களையும் சைவராக்கிய தெய்வ மாண்புடைய பேரரசியாராவர். அவ்வம்மையாரது செம்மை சான்ற திரு நாளில் சைவசமய வுண்மைகளை நாடெங்கும் பரப்பும் விருப் புடன் தொடங்கிய சித்தாந்தவகுப்புத் தொடங்கப்பெற்றது பெரிதும் போற்றற்குரியதேயாகும்.

### சிவஞான முனிவர் திருநாள்

இவ்வகுப்பு நடைபெற்ற இருபத்தொரு நாட்களுக்கிடையே மெய்கண்டார் நூலுக்கு—சிவஞான போதமாகிய சித்தாந்தத் தலை நூலுக்குத் தலைமை சான்ற பேருரையும் சிற்றுரையும் வழங் கிய நற்றவப்பெருவள்ளலாய சிவஞான முனிவரின் குருபூசைத் திருநாள் அமையப்பெற்றது.

### உமாபதி சிவனுர் திருநாள்

சித்தாந்தப் பொருள்நூல்கள் பதினுன்கனுள் எட்டு நூல்களைக் கட்டாகத் தந்தருளிய பெருமான் உமாபதி சிவனுர் திருநாளும் அமையப்பெற்றது.

### திருவரங்கனுர் திருநாள்

இவையன்றிச் சைவசமயத்தின் வளர்ச்சி கருதியே அமைக்கப்பெற்ற சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் முன்னைய முதலமைச்சரும், அதன் தாயும் தந்தையுமாய்த் திகழ்ந்து பேணி வளர்த்த பெருந்தகையாளரும், 1941ல் மெய்கண்ட சாத்திர மாநாடு மேலானமுறையில் நடத்தி மிக்குப் பரப்பிய பெருவள்ளலாருமான திருவாளர் வ. திருவரங்கனுர் நினைவு நாளும் அமையப்பெற்றது.

### எம். எல். பிள்ளை திருநாள்

மேலும் சித்தாந்தப் பொருள்நூல்களையெல்லாம் சிற்றறிவுடையாரும் கற்றுணரும் வண்ணம் எளிய இனிய உரைநடையில் ஆக்கித்தந்த் செந்தமிழ்ப் பேராசிரியர்—பல்கலைப் புலவர் திருவாளர் எம். எல். பிள்ளையென்று தமிழ்நாடு தலைக்கொண்டு போற்றும் கா. சுப்பிரமணியபிள்ளை M.A., M.L. அவர்களுடைய நினைவு நாளும் அமையப்பெற்றது. சைவத்தோடு பெரிதும் தொடர்புடைய—சைவத்திற்கே தம் வாழ்நாளையெல்லாம் ஒப்புவித்த செம்மைச் சான்றோர் பொற்புடைய நினைவு நாட்களும் இவ்வகுப்பு நாட்களில் அமைந்து, அவர்களை நினைந்து பாராட்டும் வாய்ப்பையும் பெற்றது பெரும்பேறேயாகும்.

### அருணகிரி இசைக் கழகத்தார் ஆற்றல்

இவ்வகுப்பு நிகழ்ச்சிகளை யெல்லாம் இனிய முறையில், ஏற்றவகையில் திறம்பட நடத்தித்தந்தவர்கள் நெல்லை அருணகிரி இசைக் கழகத்தார். அக் கழகத்தார் எட்டாண்டுகளாக, நெல்லைச் சந்திப்புத் தருமபுர மடத்தில் திட்டமிட்டுச் சமயப் பணியும், தமிழ்ப் பணியும் திறம்பெறப் புரிந்துவரும் சிறந்த வல்லாளர்கள். அவர்கள் அரும்பணி, நாட்டில் பெரிய மாற்றத்தையும் அரிய சமயவுணர்ச்சி தமிழ் உணர்ச்சிகளையும் எழுப்பியுள்ளது என்று சொல்லலாம். அத்தகைய கழகத் திறமை கண்டே இவ் வகுப்பு நிகழ்ச்சிகளைச் சிறப்புற நடத்தும் பொறுப்பை விருப்புடன் சைவசித்தாந்த சங்கத்தார் அதனிடம் ஒப்படைத்தனர். அன்புடன் அதனை யேற்றுக்கொண்ட ஆற்றல் மிக்க கழகம் அழகுபெற இந் நீண்டதொரு பெரு நிகழ்ச்சியை இனிது நடத்தித் தந்தது. அக் கழகத்தாருக்குச் சைவசித்தாந்த சங்கத்தாரின் நன்றி என்றும் உரியதாகும்.

### சீர்மிகு திறலோர்

அருணகிரி இசைக் கழக அமைச்சர் திரு. இராம. கனக சபாபதி பிள்ளையவர்களும், விரிவுரைப் பொறுப்பாளர் திரு. அ. க. நவநீதகிருட்டிண பிள்ளையவர்களும், உணவு அமைச்சர்

திரு. அ. ஆ. சுப்பிரமணிய பிள்ளையவர்களும், நாடக அமைச்சர் திரு. டி. கே. கணபதியவர்களும், திரு. ம. சிவசம்பு, திரு. க. சிவசம்பு, திரு. கு. சங்கரன் என்ற மூன்று தொண்டர்களும் தத்தம் பகுதிப் பணிகளைத் திறம்பெற நடத்தி, வகுப்பில் கலந்துகொண்ட மாணவ அறிஞர்களையும், சொற்பொழிவுகளைக் கேட்கவந்த மக்கள் கூட்டத்தையும் மிக்க இன்ப வெள்ளத்தில் ஆழ்த்தினார்கள். நாள்தோறும் பல்லாயிரக்கணக்கான மக்கள் சித்தாந்தச் சொற்பொழிவுகளைக் கேட்க வேட்கையுடன் வந்து திரண்டார்கள் என்றால், கழகத்தின் முத்தமிழரங்க நிகழ்ச்சிகள் எத்துணை விறுவிறுப்பையும் நெறிதரு விருப்பையும் ஊட்டி யிருக்கவேண்டும் என்பதை எண்ணிப்பார்க்கவேண்டும்.

### இன்னிசை

சொற்பொழிவு நிகழ்ச்சிகட்கிடையே தளர்ச்சியை நீக்கிக் கிளர்ச்சியை உண்டுபண்ணப் பல இடைநிகழ்ச்சிகள் இணைக்கப் பெற்றிருந்தன. அவற்றுள் ஒன்று வித்துவான், திரு. கோ. முருகையா அவர்களின் இன்னிசை. அன்பர் திரு. முருகையா அவர்கள், தருமையாதீனத் தேவாரப் பாடசாலையில் முறை யாகத் திருமுறைகளைப் பண்ணுடன் பயின்றவர். அத்துடன் வித்துவத் தேர்விலும், அங்குள்ள பல்கலைக் கல்லூரியிற் பயின்று தேர்ச்சியுற்றவர். அவர்கள் நாள்தோறும், திருக்கடவூர் அபி ராமிப்பட்டர் அருளிய அபிராமியந்தாதிப் பாடல்கள் ஐந்தைந்து பாடி, மக்கள் உள்ளத்தையெல்லாம் உருகுமாறு செய்தார்கள். அவர்கட்குச் சங்கம் நன்றி செலுத்துகின்றது.

### தருமையாதீனம் நூலொடு பொன் அளிப்பு

இவ் அபிராமியந்தாதிப் பாடல் நிகழ்ச்சி நாள்தோறும் நடைபெறுவதை அறிந்த தருமையாதீன மகா சந்நிதானம் அவர்கள் அருள்கூர்ந்து அபிராமியந்தாதி நூல் நூறு படிகள் (Copies) அனுப்பியருளிச் சித்தாந்த வகுப்பில் கலந்துகொள் ளும் அறிஞர்கட்கு வழங்குமாறு பணித்தருளினார்கள். மேலும், சித்தாந்த வகுப்புக்கு நன்கொடையாக இருநூற்றொரு ரூபாக் களும் கருணைகூர்ந்து வழங்கியருளினார்கள். வகுப்பு நிகழ்ச்சி களை வளமுற நடத்துதற்கு இடமும் பொருளும் விழா முற்றத் திற்குப் பந்தலும் தந்தருளிச் சங்கத்தாரை ஊக்குவித்தமை பெரிதும் பாராட்டற்குரியதாகும்.

### திருப்பனந்தாள் ஆதீனப் பெருங்கொடை

திருப்பனந்தாள் ஆதீனத் தலைவராய செந்தமிழ்ப் புரவலர் பெருமான் ஸ்ரீலஸ்ரீ அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அருள் கூர்ந்து, சித்தாந்தப் பேராசிரியர் திரு. து. சு. கந்தசாமி முதலி

யார் அவர்கட்குச் சித்தாந்த நிறைவுவிழாவில் வழங்குமாறு ஐந்நூறு வெண்பொன் கொண்ட பொற்கிழி யொன்றை அனுப்பியருளினார்கள்.

**நடிப்பு**

மற்றொரு இடை நிகழ்ச்சி சிறுமியர் நடனம். நாள்தோறும் திரு. விமலா, திரு. சரசுவதி, திரு. சுவர்ணம் என்ற மூன்று சிறுமியர் தேவார திருவாசகப் பாடல்கள் பலவற்றிற்கு மெய்ப் பாடு தோன்ற இன்னிசை நடனமாடி எல்லோரையும் இன்ப வெள்ளத்தில் ஆழ்த்தினர். இச் சிறுமியர்க்குப் பாடல்கட் கேற்பப் பண்ணும் கூத்தும் பயிற்றி அரங்கமேற்றி யாட்டுவித் தவர், ஆசிரியர் திருவாட்டி, லலிதாதேவியார். அவ்வம்மை யார்க்கு அன்புநிறைந்த நன்றியைச் சங்கம் தெரிவிக்கின்றது.

## தேவார நடனக் காட்சி

சிறையாரும் மடக்கிளியே இங்கேவா! தேனொடுபோல்
முறையாலே உணத்தருவன் மோய்பவளத் தோடுதரளம்
துறையாரும் கடல்தோணி புரத்தீசன் துளங்குமிளம்
பிறையாளன் திருநாமம் எனக்கொருகால் பேசாயே!

இந்தத் திருப்பாடலுக்குச் சிறுமியர் திரு. விமலாவும், திரு. சரசுவதியும் அபிநயம் பிடித்த காட்சி, கண்டவர் கருத்தை யெல்லாம் கவர்ந்தது. கிளியைக் கரத்தில் பிடித்துக்கொண்டு தேனும் பாலும் ஊட்டுவதுபோல் காட்டிப் பிடித்த நடிப்பு (அபிநயம்) மிக அழகாயிருந்தது. பிறையாளன் திருநாமத்தைப் பேசுமாறு வேண்டும் பேதைப் பெண்ணின் நெஞ்ச நிலையை—கையிற் பிடித்த கிளியிடத்துக் கொஞ்சிக் கொஞ்சிக் கேட்கும் விஞ்சிய காட்சி எல்லோருடைய நெஞ்சத்தையும் அள்ளுவதாய் இருந்தது.

## திருவாசக நடனக் காட்சி

ஆடு கின்றிலை கூத்துடை யான்கழற் கன்பிலை என்புருகிப்
பாடு கின்றிலை பதைப்பதும் செய்கிலை பணிகிலை பாதமலர்
சூடு கின்றிலை சூட்டுகின் றதுமிலை துணையிலி பிணநெஞ்சே
தேடு கின்றிலை தெருவுதோ றலறிலை செய்வதொன் றறியேனே.

இத் திருவாசகப் பாடலுக்கு நடிப்புப் (அபிநயம்) பிடித்த சிறுமியர் இருவரும் கூத்தப்பெருமான் சந்நிதியில் நின்று, நெஞ் சத்திற்கு இடித்துரைத்து அறிவுரை கூறுவதுபோல் நடிப்புப் (அபிநயம்) பிடித்தது மிக நயமாக இருந்தது. கூத்தப்பெரு மான் திருக்கோலத்தை ஆடிக்காட்டி 'என்புருகிப் பாடுகின்றிலை'

என்பதற்கு நடிப்புப் (அபிநயம்) பிடித்த காட்சி எல்லோருடைய ஊனையும் உருக்குவதாக இருந்தது. இறுதியில் தெருவுதோறும் இறைவனை அலறிக்கொண்டு தேடிய காட்சி தெவிட்டாத இன்பத்தை நல்கியது.

## இசைக் காட்சிகள்

சித்தாந்தத் தேன்

அவற்றுள் இரண்டு உச்சநிலையுற்றவை. ஒன்று, குமரகுருபரர் காட்டியசித்தாந்தத் தேன்; மற்றொன்று திருவாசக இசைச்சித்திரம்.

குமரகுருபரர் அருளிய பண்டார மும்மணிக்கோவையில் பதினோராவது பாடல்,

"ஞான சம்பந்த ஞான தேசிக
நல்லருள் திறத்தால் நம்பி நீயே
பல்லுயிர்த் தொகுதியும் பயங்கொண்டு உய்கெனக்
குடிலை யென்னுந் தடவயல் நாப்பண்
அருள்வித் திட்டுக் கருணைநீர் பாய்ச்சி
வேதம் என்னும் பாதவம்* வளர்த்தனை
பாதவம் அதனிற் படுபயன் பலவே;
அவற்றுள்,
இலை கொண்டு உவந்தனர்பலரே இலைஒரீஇத்
தளிர்கொண்டு உவந்தனர் பலரே தளிர்ஒரீஇ
அரும்பொடு மலர்பிஞ்சு அருங்காய் என்றிவை
விரும்பினர் கொண்டுகொண்டு உவந்தனர் பலரே
அவ்வாறு உறுப்பும் இவ்வாறு பயப்ப
ஒருங்கே தாங்கமென்று உச்சியிற் பழுத்த
ஆரா இன்ப அருங்கனி பிழிந்து
சாரங் கொண்ட சைவசித் தாந்தத்
தேனமுது அருந்தினர் சிலரே."

என்ற பகுதிக்குப் பல்வேறு சமயத்தாரின் பக்குவ நிலைகளை விளக்கும் இன்னிசைக் காட்சி எல்லோரையும் மகிழ்வித்தது. இறுதியில் வந்த சைவசித்தாந்திகள் சமயத் தருவின் உச்சியில் பழுத்த ஆராவின்ப அருங்கனி பிழிந்து, சித்தாந்தத் தேனை யருந்துங்காலைப், பந்தலில் இருந்த மக்கள் நாவெல்லாம் ஊறித் துடித்தன.

---

* மரம்,

### திருப்பள்ளி எழுச்சி

திருவாசகத்தில் திருப்பள்ளியெழுச்சிப் பாடல்களாகிய "அருணன் இந்திரன் திசை அணுகினன்," "இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்" என்ற பாடல்கட்குக் கழகத்தார் காட்டிய இசைக்காட்சி, பந்தலில் இருந்த மக்கள் சிந்தையெல் லாம் பத்தி வெள்ளத்தில் மூழ்குமாறு செய்தது. திருப்பெருந் துறைத் திருக்கோயிலையே நேரில் கண்டாற்போன்ற தனிப் பெருங் காட்சியாக அது திகழ்ந்தது. கதிரவன் தோற்றமும் காலை நிகழ்ச்சிகளும் சித்திரித்துக் காட்டிய முறை நன்றாக இருந்தது.

### நாடகங்கள்

இனி, கழக முத்தமிழரங்கத்தில் பல நாடகங்கள், சொற் பொழிவின் முடிவில் நடைபெற்றன. டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் தீட்டிய கிம்பளம், மனச்சான்று என்ற நாடகங்கள், கழகப் புலவர் திரு. பு. சி. புன்னைவனநாதனார் அவர்கள் தீட்டிய மெய்ப்பொருள்நாயனார் என்ற நாடகம், வித்துவான் திரு. ந. சேதுரகுநாதனார் அவர்கள் தீட்டிய 'அறுகயிறாசல்' என்ற நாடகம், பேட்டைத் திருஞானசம்பந்தர் கழகச் சிறுவர்களால் நடிக்கப்பெற்ற 'குமர குருபரர்' என்ற நாடகம் ஆகிய பல நாடகங்கள் நடைபெற்றன. குமரகுருபரர் நாடகம் நீங்கலாக வுள்ள பிற நாடகங்கள் எல்லாம் அருணகிரி இசைக்கழகத் தாரால்-நாடகவமைச்சர் திரு. டி. கே. கணபதியவர்களின் முயற் சியால் முறையே நாடோறும் திறம்பெற நடிக்கப்பெற்றன.

### நாடகத்தாரைப் பாராட்டல்

கழகத்தாரின் நாடகத்துறைப் பயிற்சியைக் கண்டு வியந்த சித்தாந்தப் பேராசிரியர் திருவாளர் தூ. சு. கந்தசாமி முதலியார் அவர்கள் சிந்தை மகிழ்ந்து பாராட்டிச் செந்தமிழ்ப் பேருரை யொன்று நாடகமுடிவில் நிகழ்த்தினார்கள். அது பின்வருமாறு:-

அன்பர்களே!

நானும் இந்த நாடகத்தைச் சுவைத்தேன். இதைப் பார்த்தபிறகு, இதை எழுதிய ஆசிரியரையா, அல்லது நடித்த வர்களையா, யாரைப் பாராட்டுவது என அறியாது நிற்கிறேன். நடித்தவர்கள் எல்லோரும், தங்களுடைய கோலத்தரா (பாத்தி ரங்களா)கவே ஆய்விட்டார்கள்.

நாடகம் மக்களை நல்வழியிற் செலுத்த ஒரு சிறந்த கருவி. இதனால்தான் இலக்கியத்தில் நாடகத்தை ஒரு கூறாகவே அமைத் தனர் நம் ஆன்றோர். நாடகம் என்ற சொல் நமக்கு இல்லை என்

பார்கள். ஆனால் நண்பர் சேதுரகுநாதனைக் கேட்டால் நாடகம் நமக்கே உரியது என்பார். நடி என்ற சொல் நமக்கு உரிய தல்லவா? நம் கூத்தப்பெருமான் திருக்கோலம், நாடகத்தின்-கூத்தின் சிறப்பைக் குறிக்கும் திருக்கோலமல்லவா!

சேக்ஃச்பீயர், காரிக்கைப் பார்த்து, "காரிக் நீ மேலே சென்றால், ஆண்டவன் உன்னைப் பார்த்துத் திகைப்பான், நீ காரிக்கா அல்லது ஃகாம்லெட்டா என்று." என்று கூறியிருக் கிறார்.

ஓர் ஆங்கிலப் பெண் எழுத்தாளர் ஆண் பெயர் வைத்து எழுதிவந்தார். எல்லோரும் பாராட்டினர். ஆனால் கார்லைல், அந்த எழுத்தைப் பார்த்து, "இது ஆணினுடையதா யிருக்கமுடி யாது, இது பெண்ணினுடையதாகத்தான் இருக்கமுடியும்," என்றார்.

அதுபோல இங்குப் பெண் கோலத்தில் நடித்தவரைப் பார்த்துப் பெண் என்றே மயங்கிவிட்டேன். அத்தனை சிறப் பாகப் பொருத்தமாக இருந்தது.

ஆகையால், கோல்ட் ஃசுமித் கூறியதுபோல, இவர்கள் பெற்றோரால் பெற்ற பிள்ளைகளல்லர். ஆனால் பிறப்பாலே நடிகர்கள். நான்முகனார் பார்த்து, "இவர்கள் யார்? நான் இவர்களைப் படைக்கவில்லையே?" எனத் திகைப்பார்.

இவர்களைப் பாராட்டுகிறேன். இதை எழுதிய ஆசிரியரைப் பாராட்டுகிறேன். இதை அமைத்த சங்கத்தாரைப் பாராட்டு கிறேன். நீடுவாழ்க என வாழ்த்துகிறேன்.

உரையாடல்கள்

நெல்லைச் செங்குந்தர் தொடக்கப்பள்ளி மாணவர் அறுவர், பதி, பசு, பாசம் என்ற பொருள்கள் பற்றிய உரையாடல்களை நடத்திப் பல அரிய உண்மைகளை எளிதாக விளக்கினார்கள். 'சைவ சித்தாந்தம்' என்னும் பொருள்பற்றிய உரையாடலைச் செந்தமிழ்ப் புரவலர் திரு. மு. சுப்பிரமணியன் செட்டியார் திருமுறைப் பாடசாலை மாணவியர் இருவர் நிகழ்த்தினர். இப் பாடசாலை மாணவியர் எண்மர், சிவஞானபோதப் பன்னிரு சூத்திரங்களையும் பண்ணோடு குழைத்து இசைக் கும்மியாக ஆடிப்பாடி அடித்துக் காட்டினர். அது மிக அழகாக இருந்தது. அம் மாணவியர்க்கு நன்கு பயிற்சியளித்த இசை ஆசிரியர் திரு. ஆ. வேங்கடாசலம் பிள்ளையவர்கட்குப் பாங்குடைய நன்றியைச் சங்கம் செலுத்துகின்றது.

**கருத்து**

### மெய்கண்டான்தமிழ் நூற்பாக் கருத்து

அனைத்தையும் ஒடுக்கும் அரனே முழுமுதல்
ஆண்டவன் அருளால் மீண்டும் உலகுள
இன்உடல் அகத்துயிர் விளக்கம் மன்னும்
ஈண்டிய உயிர்நிலை ஐவகை என்ப
உயிர்கள்பால் தோன்றும் உடையவன் உதவி
ஊழே ஒருநிலை இருநிலைப் பொருள்உள
என்றும் சார்ந்து நின்றதே உயிர்நிலை
ஏற்றமாம் உணர்வை இறையே நல்கும்
ஐயன்ஐந் தெழுத்தால் அருமலம் கழலும்
ஒட்டிய கட்டை விட்டகல் வீடு
ஓவா இன்பம் இறையடி உறுதல்
ஔவியம் இலாஇடத்து அரன்வெளி ஆமே.

**வில்லுப்பாட்டு**

மற்றொரு அரிய இடை நிகழ்ச்சி வில்லுப்பாட்டு. சிவஞான முனிவர் வரலாறு, மெய்கண்டார் வரலாறு ஆகிய இரு வரலாறுகள் தனித்தனி இரு நாட்களில் வில்லிசையில் கழகத்தார் அமைத்துப் பாடியது பொதுமக்களுக்கும் மகிழ்வூட்டியது. சித்தாந்த வகுப்பு நிறைவு விழாவில் நிகழ்த்திய 'சித்தாந்தக் கோமாளிக் கதை'—நாட்டிய நிகழ்ச்சி, வேடிக்கையும் வியப்பும் விளைத்தது. இக் கதைகளைச் சிறந்த முறையில் அமைத்துத் தந்தவர் கழக விரிவுரைப் பொறுப்பாளர் திரு. அ. க. நவநீத கிருட்டிண பிள்ளையவர்கள்.

# வில்லுப் பாட்டு

## தென்பாண்டி நாட்டுத் தொல்கலை

'வில்லிசை' யென்னும் வில்லுப் பாட்டு, தென்பாண்டி நாட்டிற்கே யுரியதொரு அரிய கலை. தமிழ்ப் பொதிகைக் காட்டிடத்தே வேட்டையாடப் புகுந்த வில்வீரன் ஒருவன், பகற் பொழுதெல்லாம் வேட்டையாடிக் களைத்துச் சோர்ந்தவன், மாலை நேரத்தில் செழித்த மரமொன்றின் அடியில் அமர்ந்தான். தன் கையமர்ந்த வில்லைத் தரையில் சார்த்தி, அம்புக்கோலால் அவ்வில் நாணில் மெல்லிய தாளவோசை தோன்ற அடித்து, அத் தாளத்திற்கேற்ப இன்னிசைத் தமிழ்ப் பாடல் பாடித் தன் களைப்பு நீங்கப் பெற்றான்.

வில் வீரனது களைப்பை யகற்றவந்த கலையாகிய வில்லிசை, மலை நாட்டுச் சிறு தெய்வப் பெரும் பூசைக் கொடைநாட்களில் பொதுமக்கள் உள்ளத்தைப் பரவசப்படுத்தும் நல்லிசைக் கலையாக உருவாயிற்று. வில்லுப் பாட்டு என்றால் சொல்லவொண்ணாத பெருங்கூட்டம் தென்பாண்டி நாட்டில் திரண்டுவிடும். அவ்வில்லிசையில் அமைத்துப் பாடும் கதைகளோ சிறு தெய்வங்களைப் பற்றியனவாகவே யிருக்கும்.

அத்தகைய வில்லிசைக் கலையில் நல்லறிஞர் வரலாறுகளை யமைத்துப் பண்ணுறுத்திப் பாடினால் எண்ணற்ற பாமரர்க்கு அரிய கருத்துக்களை எளிதில் ஊட்டமுடியும் என்று நினைத்த எண்ணம் திண்ணமாக வெற்றியுற்றது கண்டு கழகத்தார் வீறு கொள்கின்றனர். அக் கிளர்ச்சிப் பெருக்கினால் பல அரிய வரலாறுகள் வில்லிசைக்கு உருவாயுள்ளன. அவற்றுள் தமிழ் வளர்ந்த கதை முதலிடம் பெறுவதாகும். சிவஞான முனிவர் வரலாறு, மெய்கண்டார் வரலாறு ஆகிய கதைகள் இச்சித்தாந்த வகுப்பு நிகழ்ச்சிகளில் இடம்பெற்று அணிசெய்தன.

'சிவஞான முனிவர் வரலாறு' வில்லுப் பாட்டை வில்லுப் புலவராக விளங்கிப் பண்ணோடு பாடியவர் திரு. தி. சீனிவாசனார்.

'மெய்கண்டார் வரலாறு' வில்லுப் பாட்டை வில்லுப் புலவராக விளங்கிப் பண்ணோடு பாடியவர் அருணகிரி இசைக் கழக அமைச்சர் திரு. இராம. கனகசபாபதி பிள்ளையவர்கள்.

## சிவஞான முனிவர்

வில்லுப் பாட்டின் சுவையைச் சிறிது கீழே தருகிறோம். 'சிவஞான முனிவர் வரலாறு'—வில்லுப் பாட்டின் ஒரு பகுதி:—

இடையில்

(பாட்டு)

புறத்தினில் சென்றிருந்த புலமைமிக்க தந்தையார்
அகத்தினை அடைந்திட்டார் அருஞ்செயல் தெரிந்திட்டார்
முன்செய் பெருந்தவமாம் முக்களா லிங்கர் தம்மை
என் தவமே! கண்ணே! எம்குல மணிவிளக்கே!
என்றுபா ராட்டிநின்றார் எங்கவர் சென்றார்என்றார்
கண்டவரைத் தொழவேண்டும் காட்டுவாய் கண்ணே! என்றார்
கருவில் திருவுடையார் முனிவர்தமைக் காட்டிநின்றார்
பெருந்தவர் கும்பிட்டுத் திருவடி பணிந்து நின்றார்.

(உரைநடை)

முக்களாலிங்கரின் தந்தையாகிய ஆனந்தக் கூத்தர், அந்தத் துறைசைத் துறவிகளின் தூயமலர்ப் பாதத்தில் எட்டுறுப்புந் தோய விழுந்து வணங்கினர். பெரியோர்களுக்கு வணக்கம் செய்யும் விதத்தை பஞ்சாங்க வணக்கம், அட்டாங்க வணக்கம், சாட்டாங்க வணக்கம் என்றெல்லாம் சொல்லுவார்கள். நம் தம்பி யொருவனிடம், 'தம்பீ! பஞ்சாங்க வணக்கம் செய், பார்ப்போம்,' என்றேன். அவன், உடனே நம் கணியர்—டாக்டர் இ. மு. சு. கணித்த சைவப் பஞ்சாங்கத்தைக் கொண்டு வந்து கீழே வைத்தான். அதற்குக் கற்பூரம் காட்டிக் கீழே விழுந்து வணங்கினன். 'என்னப்பா செய்தாய்' என்றேன். 'பஞ்சாங்க வணக்கம் செய்தேன்' என்று சொல்லிச் சிரித்து நின்றான். 'ஆகா! உன் புத்தியே புத்தி! பஞ்சாங்க வணக்கம் என்றால் பஞ்சாங்கத்தை வணங்குவதில்லையப்பா! ஐந்து உறுப்புகள் என்றாலும் பஞ்ச அங்கம் என்றாலும் ஒன்றுதான். நம் உடம்பிலுள்ள ஐந்து உறுப்புகள் நிலந்தோய வணங்குவதுதான் பஞ்சாங்க வணக்கம் எனப்படும்' என்று அவனுக்குச் சொல்ல வேண்டியதாயிற்று. இப்படிப் பிறமொழிச் சொற்களை கையாளுவதால் வருங்கேட்டை என்னவென்று சொல்லுவது!

மெய்கண்டார்

'மெய்கண்டார் வரலாறு'--வில்லுப் பாட்டின் ஒரு பகுதி:—

(பாட்டு)

எங்கும் நிறைந்த பொங்குபே ரொளியே
தங்கும் கருணைத் தனிப்பே ருருவே
பொய்கண் டகன்ற மெய்கண்ட தேவர்
தெய்வக் கதையைத் தீந்தமிழில் பாட

வில்லின் இசையில் விரும்பியான் பாட
நல்லருள் செய்வாய் வல்லமை தருவாய்
பேரவை யிருக்கும் பெரியோர் மகிழச்
சீருடன் பாடிடத் திருவருள் புரிவாய்.

(உரைநடை)

கற்றவரே! நற்றவரே! மற்றவரே! சித்தாந்தம் கற்றவரே! உங்கள் பொன்னடிகட்கு எங்கள்பணிவான வணக்கம். மூவேழு நாட்களாக முப்பொருள் உண்மைகளை விளக்கும் ஒப்பரிய சொற்பொழிவுகளை நாள்தோறும் கேட்டுக் கேட்டுச் சைவ சித்தாந்தப் பெரு வெள்ளத்தில் மிதந்துகொண்டிருக்கிறீர்கள். இந்த வெள்ளத்திலிருந்து உங்களையெல்லாம் கரையேற்றவே நாங்கள் வந்திருக்கிறோம். அப்படியானால் தோணி எங்கே? இதோ! தோணியைச் செய்யத் தொடங்கிவிட்டோம். இன்னும் அரைமணி நேரத்திற்குள்ளே தோணி செய்து முடிந்துவிடும். உங்கள் எல்லோரையும்—அடேயப்பா! இவ்வளவு பெருங்கூட்டத்தையுமா? என்று கேட்டுவிடாதீர்கள். இனிமேல் வரப் போகும் பெருங் கூட்டத்தையும் அந்த ஒரே தோணியில் ஏற்றி, அக்கரையாகக் கரைசேர்த்து விடுவோம். பயப்படாதீர்கள்.

(பாட்டு)

தெண்ணீர் வயல்தொண்டை நன்னாடு சான்றோர்
எண்ணி லாதவரை ஈந்த பெருநாடு
சோழ நன்னாடு சோறு மிகவுடைத்து
வாழ அருஞ்செல்வம் வழங்கும் தகவுடைத்து
இந்த இருநாட்டுக் கிடையில் நடுநாடு
வந்த முனைப்பாடி வளரும் திருநாடு
அரியதிரு நாவரசும் ஆலால சுந்தரரும்
பெரியோர்கள் பல்லோரும் பிறந்த உயர்நாடு.

(உரைநடை)

ஓர் ஊருக்குப் பெருமை, அந்த ஊரில் தோன்றிய சான்றோரைப் பொறுத்தது. ஒரு நாட்டுக்குப் பெருமை அந்த நாட்டில் தோன்றிய நல்லோரைப் பொறுத்தது. தமிழ் மூதாட்டியாகிய அவ்வை ஓரிடத்துக் கூறினார்: நாடாயிருந்தாலென்ன! காடாயிருந்தாலென்ன! மேடாயிருந்தாலென்ன! பள்ளமாயிருந்தாலென்ன! "எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி நல்லை! வாழிய நிலனே" என்று கூறினார்.

# அறுகயிறூசல்

## [சித்தாந்தச் சிறு நாடகம்]

[மணமகனும் மணமகளும் ஊஞ்சலில் அமர்ந்திருக்கிறார்கள். மைத்துனன் ஊஞ்சலையாட்டுகிறான். பின்பு சிறிது திகைத்து நெற்றி வேர்வையை வழித்து வீசிவிட்டு நிற்கிறான்.]

**மணமகன் :** என்ன மாப்பிள்ளை! ஊஞ்சலை ஆட்டியாட்டி அலுத்துப்போனீரோ!

**மைத்துனன் :** இல்லை, அத்தான். இந்த ஊஞ்சலைப் பார்த்த உடனே வேறொரு நினைப்பு வந்தது.

**மண :** என்ன மாப்பிள்ளை, உமக்கு அடுத்த ஆண்டு திருமணத்தை நடத்திவிடுவோம். இவ்வளவுதானே.

**மைத் :** இல்லை அத்தான். இது வேறு ஒரு காரியம்.

**மண :** அது என்ன காணும் காரியம். அந்தக் காரியத்தை வெள்ளியமாக்குமே பார்ப்போம்.

**மைத் :** அத்தான்! இப்போது உங்களைத் தாங்குவது எது?

**மண :** அட! இது ஒரு கேள்வியா? இந்த ஊஞ்சல் பலகையிலேதானே இருக்கிறேன். இதுதான் தாங்குகிறது. (மணப்பெண்ணை நோக்கி) பெரிய கேள்வியைக் கேட்டுட்டார், நம்ம மாப்பிள்ளை, பார்த்தாயா?

**மணமகள் :** உங்களுக்குத்தான் மாப்பிள்ளை..............எனக்கு?

**மண :** ஆமா ஆமா! உனக்கு மாப்பிள்ளை நான்தான், இது தெரியாதா?

**மைத் :** அத்தான், அத்தான்! நீங்கள் சொன்னது தப்பு. உங்களை அந்தப் பலகை தாங்கவில்லை.

**மண :** என்ன மாப்பிள்ளை, இப்படி வந்திட்டீர். எல்லாருக்குந் தெரியுமே! என்னை இந்தப் பலகைதானே தாங்குகிறது. ஐயமிருந்தால் உம் அக்காளைக் கேளும். ஐயம் எடுத்துவிடுவாள்.

**மைத் :** அஃது இருக்கட்டும் அத்தான். அந்தப் பலகையை எது தாங்குகிறது?

**மண :** இந்தக் கயிறுகள்.

**மைத் :** கயிற்றை எது தாங்குகிறது?

மண : முகடு.

மைத் : முகட்டை எது தாங்குகிறது?

மண : தூண்.

மைத் : தூணை எது தாங்குகிறது?

மண : இந்தத் தரைதான்.

மைத் : ஆகவே, உங்களைத் தாங்குவது இந்தத் தரைதானே, அத்தான்.

மண : ஏ! போக்கிரி மாப்பிள்ளை! ஏமாத்திப் போட்டீரே காணும். நான் இவ்வளவு பெரிய கேள்விபோட்டீரென்று நினைக்கவில்லை.

மைத் : இன்னும் கேளுங்கள் அத்தான்.

மண : சொல்லும் சொல்லும். இன்னும் என்னவெல்லாம் சொல்லப்போகிறீரோ?......முதலிலேயே ஆணோ அலியோ அரிவையோ என்று என்னைக் கேலி செய்வதுபோலத் தொடங்கி ஆண்டவனிடத்தில் கொண்டுபோய்ச் சேர்த்து விட்டீர். இப்போது என்ன சொல்லப்போறீர் மாப் பிள்ளை.

மைத் : அத்தான்! இந்த ஊஞ்சற் கயிறுகளை அறுத்து விட்டுட்டா?

மண : ஏ! போக்கிரி மாப்பிள்ளை!. பொறுங்காணும். நான் இறங்கிவிடுகிறேன்.

மைத் : அப்படி ஒன்றும் செய்யமாட்டேன் அத்தான். கயிற்றை அறுத்தால் ஊஞ்சல் என்னவாகும்?

மண : இது தெரியாதாக்கும். தரையிலே பொத்தடீர்! என்று விழுந்துவிடும். பெரிய கேள்வியாக்கும் இது.

மைத் : பொறுங்கள் அத்தான் பொறுங்கள். ஊஞ்சல் பலகை யைத் தூண்களினால் மறைமுகமாகத் தாங்கிய இந்தத் தரை ஊஞ்சல் கயிறற்ற உடனே நேர்முகமாகத் தாங்குகிற தல்லவா?

மண : ஆமாம் ஆமாம்! அதற்கென்ன ஐயம்?

மைத் : ஐயமில்லை அத்தான். இந்தக் காலத்திலே யார்தான் ஐயமிடப்போகிறார்கள். அதற்குச் சொல்லவில்லை. முன்பு தோன்றாத்துணையாக மறைந்து தாங்கிய தரை, தன்னை அணுகவொட்டாமல் தடுத்த கயிறு அற்றவுடன் நேர்முக மாகத் தாங்கியதுபோலத், தோன்றாத்துணையாகத் தத்து

வக் கூட்டத்திற்கு அப்பால் நின்று உதவும் கடவுள், நமது பாசம் அற்றவுடனே நேர்முகமாக வந்து தாங்கிக்கொள் வான் அத்தான். அதைத்தான் சொல்லவந்தேன். முப்பத் தாறு புரியுள்ள இந்தக் கயிறு அற்றவுடன் இந்தத் தரை தாங்கியதுபோல, முப்பத்தாறு தத்துவப்பாசம் அற்ற வுடன் அவன் நேர்முகமாகத் தாங்குவான்.

மண : என்ன மாப்பிள்ளே, கயிறு திரிக்கிறீர் என்றுகூடச் சொல்ல முடியவில்லையே. கயிற்றை அத்துவிட்டே கடவுளே உணர்த்துகிறீரே! இதுக்கு நம்ம பெரியவாள் மேற்கோள் ஏதாவது உண்டோ?

மைத் : கேளுங்கள் அத்தான், கேளுங்கள். “ஊசல் கயிறற்ருல் தாய் தரையேயாந் துணையான்”* என்று நம்ம மெய் கண்டதேவர் சொல்லியிருக்கிருரே. இங்கே நம்ம சிவஞான போத வகுப்பிலே கேட்டதை மறந்துவிட்டீர்களோ?

மண : எல்லாம் இந்தத் திருமண நினைப்பிலே.

மைத் : அதிருக்கட்டும் அத்தான். நம்ம திருநாவுக்கரசு நாய ஞர் தேவாரத்திலே இருந்து அன்றைக்கு உங்கள் தங்கை பாடின பாட்டு நினைவில்லையா? அந்தப் பாட்டின் கருத் துத்தானே இது.

மண : எந்தப் பாட்டு மாப்பிள்ளே! சொல்லுங்கள்.

(பாடலைப் பாடுதல்)

மைத் : “உறுகயி றூசல்போல ஒன்றுவிட் டொன்று பற்றி
மறுகயி றூசல்போல வந்துவந் துலவு நெஞ்சம்
பெறுகயி றூசல்போலப் பிறைபுல்கு சடையாய் பாதத்
**தறுகயி றூச**லானேன் அதிகைவீ ரட்ட னீரே.”

—நாவுக்கரசர், ச, உரு—ரு.

மண : அருமை! அருமை! மாப்பிள்ளே. ஆளே அலியோ அரிவையோ என்று தொடங்கி ஒரு நாடகமே நடத்தி விட்டீரே.

மைத் : ஆமாம் அத்தான். இந்தப் பாட்டின் விரிவுரையெல் லாம் நேற்று நம்ம சித்தாந்த பண்டிதர், ப. இராமநாத பிள்ளே சொன்ஞர்களே கேட்கவில்லையா?

மண : ஆமா மாப்பிள்ளே. நீர் நல்ல கெட்டிக்காரர்தான். இனி இந்த வேலைக்கு நீர் தகுதியில்லை. உம்மையும் சித்தாந்த பண்டிதராக்கிவிட வேண்டியதுதான். வாரும் மாப்பிள்ளே, போகலாம்.

---

* சார்பலகை நாற்கயிறு தாங்குவிட்டம் தூணிரண்டும்
ஓர்எட்டாம் நுண்ணுடலொப்பு.

# 'சித்தாந்தக் கோமாளி கதை'

[ஒரு பகுதி]

சித்தாந்தம் கமழ வேண்டும்—ஆமடி தங்கம்
சேகமெங்கும் பரவ வேண்டும்—அப்படிச் சொல்லு
முப்பொருள் தெரிய வேண்டும்—ஆமடி தங்கம்
மூவுலகும் அறிய வேண்டும்—அப்படிச் சொல்லு
வீட்டினைக் காட்ட வேண்டும்—ஆமடி தங்கம்
வினைகளை யொழிக்க வேண்டும்—அப்படிச் சொல்லு.

**வேறு**

வீட்டுக்கு வழி காட்ட
வேடிக்கைக் கோமாளி வந்தானய்யா—முத்தி
வீட்டுக்கு வழி காட்ட
வேடிக்கைக் கோமாளி வந்தானய்யா.
ஆட்டம் ஆடி அறங்கள் பாடி
அழகான சோடியோடு வந்தானய்யா.

காட்டானை விட்டிறங்கி வந்தானய்யா
கருங்குடுமி சீவிக்கொண்டு வந்தானய்யா
நாட்டெருமை போல்கதறி வந்தானய்யா
நாட்டில்சித் தாந்தம்சொல்ல வந்தானய்யா

படிச்சோம் முடிச்சோம் ஞானம்தேன் பட்டுப்
பாசம் கிழிஞ்சுது போ.

(உரைநடை)

**நாரதர்:** மூவுலகும் சென்று முதல்வன் காட்சியைக் கண்டு பூவுலகம் வந்த புனித நாரதன் வந்தேன்.

**கோமாளி:** வந்தீரா? வாருமையா நாரதரே! என்ன செய்தி?

**நாரதர்:** ஐயா! கோமாளியாரே!

**கோமாளி:** என்னய்யா! ஏமாளியாரே!

**நாரதர்:** உங்களை ஒன்று கேட்கலாம் என்று நினைக்கிறேன்.

**கோமாளி:** நல்லா நினைத்தீர்! அதைச் சொல்லித் தொலையும். நீர் ஒன்று கேட்பதில் எனக்கு விருப்பமில்லை. நூறு கேளும். சரமாரியாகச் சொல்லித் தள்ளுகிறேன்.

[மற்றொரு பகுதி]

**கோமாளி:** ஞானியாகிப் போனேன்—இப்போ மெய்ஞ்
ஞானியாகிப் போனேன்

வானவன் மோன ஞான பரம்பொருள்
மேனிலை யெல்லாம் விளங்கிப் புரிந்தேன்
—ஞானி

சித்தாந்த வகுப்புத் துவங்குதற்கு முன்னே
சேகமும் இறையும் இல்லையென்று சொன்னேன்
இப்போ உலகுயிர் இறைவன் உணர்ந்தேன்
இறையருள் பெறும்வழி தெரிந்தேன்
வினைகளை யொழிக்கவே முனைந்தேன்
வீடுபே றடைய விழைந்தேன்—விழைந்தேன்
—ஞானி.

**தேர்வுப் பரிசு**

வகுப்பில் கலந்து பயின்ற மாணவ அறிஞர்கட்கு 12-5-'52ல் ஒரு தேர்வும் 20-5-'52-ல் ஒரு தேர்வுமாக இரு தேர்வுகள் நடைபெற்றன. முதல் தேர்வை ஊக்கும் வகையில் திரு. சிவஞானம் பிள்ளையவர்கள் முதல் மதிப்பெண் பெறுவார்க்குச் சிவஞானமா பாடியப் பரிசு வழங்குவதாக வாய்மொழிந்தனர். அங்ஙனமே அத்தேர்வில் முதன்மையான மதிப்பெண் பெற்ற திருப்பனந்தாள் சுவாமிநாத சுவாமிகள் செந்தமிழ்க் கல்லூரித் தமிழாசிரியர் திரு. சுந்தரமூர்த்தியவர்கள் அந்தப் பரிசைப் பெற்றார்கள்.

இறுதித்தேர்வில் முதன்மையான மதிப்பெண் பெற்ற திருப்பனந்தாள் கல்லூரி மற்றொரு தமிழாசிரியர் திரு. கோவிந்தராசன் அவர்கள், குலசைச்செல்வர் திருவாளர், ராம. ப. செந்திலாறுமுகம் பிள்ளையவர்கள் சிந்தையுவந்து வழங்கியருளிய சிவஞானமாபாடியப் பரிசைப் பெற்றார்கள். பரிசுபெற்ற புலவர்கள் இருவரும் அமைதியும் அறிவும் ஒழுக்கமும் சொல்லாற்றலும் நிறைந்தவர்கள். இப் புலவர்களைத் திருப்பனந்தாள் ஆதீனத் தலைவர் அவர்கள் தம் சொந்தச் செலவிலேயே வகுப்பில் பயின்று வர அனுப்பியருளியமை குறிப்பிடத்தக்கதாகும்.

## சித்தாந்தவகுப்பு முதல்தேர்வில் கலந்துகொண்டோர்

தேர்வு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | திரு. | K. சுந்தரமூர்த்தி | 15. | திரு. | அரி. ஆ. நடராசன் |
| 2. | ,, | அ. க. நவநீதகிருட்டி | 16. | ,, | மரு. சிவகுருநாதன் |
| 3. | ,, | ஆ. முருகேசன் [ணன் | 17. | ,, | மீ. கந்தசாமிப் புலவர் |
| 4. | ,, | இராமசாமி ஐயா | 18. | ,, | கோ. முருகையா |
| 5. | ,, | பா. மகாலிங்க தேசிகர் | 19. | ,, | மு. முத்தணைந்த பெருமாள் |
| 6. | ,, | மு. கோவிந்தராசன் | 20. | ,, | வீர. சிவசுப்பிரமணியம் |
| 7. | ,, | சுந்தரகுமரன் | 21. | ,, | கு. பரமசிவன் |
| 8. | ,, | வே. சங்கர நாராயணன் | 22. | ,, | மீனாட்சிசுந்தர தேசிகர் |
| 9. | ,, | ந. பாலம்மாள் | 23. | ,, | வை. மு. சண்முக தேசிகர் |
| 10. | ,, | K. கணபதிப் பிள்ளை | 24. | ,, | சுந்தரம் |
| 11. | ,, | பொன். சுப்பிரமணியம் | 25. | ,, | ஆதிமுருகவேள் |
| 12. | ,, | ந. முத்தையன் பண்டா | 26. | ,, | S. கூர்மாவதாரக் கோனார் |
| 13. | ,, | ச. நடராச பிள்ளை [ரம் | 27. | ,, | கா. மாயாண்டி பாரதி |
| 14. | ,, | கே. வெள்ளைச்சாமி | | | |

## இறுதித்தேர்வில் கலந்துகொண்டோர்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | திரு. | மு. கோவிந்தராசன் | 14. | திரு. | சுந்தரகுமரன் |
| 2. | ,, | மீ. கந்தசாமிப் புலவர் | 15. | ,, | இராமசாமி ஐயா |
| 3. | ,, | ஆதிமுருகவேள் | 16. | ,, | இரா. கதிர்வேல் முருகன் |
| 4. | ,, | கு. பரமசிவன் | 17. | ,, | K. சுந்தரமூர்த்தி |
| 5. | ,, | மரு. சிவகுருநாதன் | 18. | ,, | வே. சங்கரநாராயணன் |
| 6. | ,, | ஆ. முருகேசன் | 19. | ,, | கே. வெள்ளைச்சாமி |
| 7. | ,, | வீர. சிவசுப்பிரமணியம் | 20. | ,, | கோ. முருகையா |
| 8. | ,, | பா. மகாலிங்க தேசிகர் | 21. | ,, | வை. மு. சண்முக தேசிகர் |
| 9. | ,, | ந. பாலம்மாள் | 22. | ,, | ச. நடராச பிள்ளை |
| 10. | ,, | பொன். சுப்பிரமணியம் | 23. | ,, | S. கூர்மாவதாரக் கோனார் |
| 11. | ,, | அ.க. நவநீதகிருட்டிணன் | 24. | ,, | க. சேதுராமலிங்கன் |
| 12. | ,, | K. கணபதிப் பிள்ளை | 25. | ,, | சுந்தரம் |
| 13. | ,, | சொ. கு. மதுரைநாயகம் பிள்ளை | 26. | ,, | அரி. ஆ. நடராசன் |

**சொற்பொழிவுகள்**

நாள்தோறும் சொற்பொழிவு நிகழ்ச்சிகளில் சித்தாந்த வகுப்பு மாணவ அறிஞர்களும் பங்குகொண்டார்கள். அவர்களுடைய சொற்பொழிவுகளின் சுருக்கம் பின்னர்த் தரப்பெறும்.

## சித்தாந்தவகுப்பு மாணவ அறிஞர்களின் சொற்பொழிவுகள்

| | | |
|---|---|---|
| மங்கையர்க்கரசியார் | —திரு | அ. க. நவநீதகிருட்டிணன் |
| திருவுந்தியார் | — ,, | ந. சேது ரகுநாதன் |
| சித்தாந்தத் தொன்மை | — ,, | டாக்டர், அண்ணாமலைப் பிள்ளை |
| அறிவு விளக்கம் | — ,, | சுந்தரமூர்த்தி |
| மறக்கருணை | — ,, | மு. கோவிந்தராசன் |
| திருவடிப் பெருமை | — ,, | பொன். சுப்பிரமணியம் |
| குறிக்கோள் | — ,, | வை. சண்முக தேசிகர் |
| புதியநோக்கம் | — ,, | ஆதி. முருகவேள் |
| குருவருள் | — ,, | மகாலிங்க தேசிகர் |
| இது நல்ல சமயம் | — ,, | கூர்மாவதாரக் கோனார் |
| தமிழும் இசையும் | — ,, | கோ. முருகையா |
| திருவருள் | — ,, | வீர. சிவசுப்பிரமணியம் |
| சமய விஞ்ஞானம் | — ,, | மரு. சிவகுருநாதன் |
| கடவுள் உருவம் | — ,, | ந. பாலம்மாள் |
| ஞானத்தின் திருவுரு | — ,, | வே. சங்கரநாராயணன் |
| வள்ளுவரும் சித்தாந்தமும் | — ,, | ச. கணபதி முதலியார் |
| சிவப்பிரகாசர் செய்யுள் நலம் | — ,, | சுந்தர குமரன் |
| திருநீற்றுச் செல்வம் | ,, | மீ. கந்தசாமிப் புலவர் |
| சமயப்பணி | — ,, | மு. முத்தணைந்த பெருமாள் |
| அ-ம் சூத்திர விளக்கம் | — ,, | ந. பாலம்மாள் |
| விண்ணப்பம் ஒன்று | — ,, | சொ. கு. மதுரை நாயகம் பிள்ளை. |

சிறுமியர் சொற்பொழிவுகள்

மாணவச் சிறுமியர் ஆற்றிய சிறு சொற்பொழிவுகளில் கழக அமைச்சர் திரு. வ. சுப்பையா பிள்ளையவர்களின் தவப் புதல்வியர் இருவர் திரு. சு, வடிவழகி யம்மையும் திரு. சு. வயிர மணி யம்மையும் ஆற்றிய சிற்றுரைகள் குறிப்பிடத் தக்கன.

திரு. சு. வடிவழகி, மங்கையர்க்கரசி, மங்கை பங்கன் எனச் சிற்றுரை இரண்டு நிகழ்த்தினர். 'மங்கைபங்கன்' என்ற தலைப்பில் நிகழ்த்திய சிற்றுரை பெரிதும் பாராட்டற் குரியதாகும். இறைவன் அம்மையப்பனாய் விளங்கும் அருமையைத் தெளிவு படுத்திய திறம் நன்றாயிருந்தது. வானவில் படவிளக்கம் செய்து மேற்பகுதியிற் காணும் செந்நிறம் செம்மேனி யெம்மானைக் குறிப்பதென்றும் கீழ்ப்பகுதியிற் காணும் நீல நிறம் நீல மேனி யுடன் நின்றருளிரும் கோலத்தாயின் குளிர் வடிவத்தைக் குறிப்பதென்றும் அமெரிக்க மெய்ந்நூற் பேராசிரியர் ஜேம்ஸ்

என்பவர் சுட்டியதை எடுத்துக்காட்டி விளக்கிய திறம் வியக்கற்பாலது.

அஃதன்றி மணிவாசகத் தொடர்களாகிய,

"குவளைக் கண்ணி கூறன் காண்க
அவளுந் தானும் உடனே காண்க"

என்னும் தொடர்களை விழாப் பந்தலில் இருந்த மக்களையெல்லாம் சொல்லுமாறு செய்து நல்லுணர்ச்சி யூட்டியது மிக நன்றாயிருந்தது.

அமைச்சர் அவர்களின் மற்றொரு மகளாகிய அருமைச் செல்வி வயிரமணி நிகழ்த்திய 'கடவுள்' என்பதுபற்றிய சிற்றுரைக் கருத்துக்கள் வைரமும் மாணிக்கமுமாக விளங்கின. அத்துணை அரிய கருத்துக்களை மழலைக் குழந்தையின் வாயிலாகக் கேட்ட மக்கள் பெருவியப்புக்கொண்டனர். கழக விரிவுரைப் பொறுப்பாளர் என்றும் வயிரமணி, அறிவால்—ஒழுக்கத்தால்—இன்ப வாழ்வால் வைரம்போல் வளரொளியுடன் வாழ்க! வாழ்க! என்று வாயார வாழ்த்தினார்கள்.

### சிறப்புச் சொற்பொழிவுகள்

சித்தாந்தச் சிறப்புச் சொற்பொழிவுகள் ஆற்றச் சித்தாந்தப் பெரும் புலவர்கள் பலர் வந்திருந்தனர். சித்தாந்த பூடணம் திரு. வே. மாணிக்கவாசகம் பிள்ளையவர்கள், சித்தாந்த சைவப் புராணிகர் திரு. ச. முத்துக்குமாரசாமி பிள்ளையவர்கள், சித்தாந்த கலாநிதி திரு. ஔவை. சு. துரைசாமி பிள்ளையவர்கள், சித்தாந்தப் பேராசிரியர் திரு. ந. சிவகுருநாத பிள்ளையவர்கள், சித்தாந்தச் செல்வர் திரு. வீ. குமாரவேற் பிள்ளையவர்கள், சித்தாந்த பண்டிதர் திரு. ப. இராமநாத பிள்ளையவர்கள், பெருநாவலர் திரு. பு. சி. புன்னைவனநாத முதலியார் அவர்கள், குன்றக் குடியாதீனம் மகாசந்நிதானம்—ஸ்ரீலஸ்ரீ தெய்வ சிகாமணி அருணாசல தேசிக சுவாமிகள் அவர்கள்.

மேற்கண்ட சித்தாந்தப் பேரறிஞர்களின் சொற்பொழிவுகளும் இரவு நிகழ்ச்சியில் இடம் பெற்றிருந்தன. கழகப் புலவர் திரு. ப. இராமநாத பிள்ளையவர்களும், திரு. ச. முத்துக்குமாரசாமி பிள்ளையவர்களும் நாள்தோறும் சித்தாந்தத் தொடர் சொற்பொழிவுகள் நிகழ்த்திவந்தார்கள்.

வகுப்பில் இடையிடையே கலந்துகொண்ட மாவட்ட நீதிபதிகள் திரு. கஜபதி நாயகர் அவர்கள், திரு. வி. சுப்பிரமணிய நாடார் அவர்கள்போன்ற பெருமக்கள் பலரும் அரிய சிற்றுரைகள் நிகழ்த்தினர்.

ஊர்வலக் காட்சி

19-5-52 காலை வகுப்புடன் சிவஞானபோதச் சிற்றுரைப் பாடம் முடிவுற்றது. அன்று மாலை மணி 6-க்குத் திருநெல்வேலி நெல்லையப்பர் திருக்கோவில் கோபுரவாயிலில் மெய்கண்டார் திருவுருவ வழிபாட்டுக்குப்பின் யானைமீது மெய்கண்டார் திருவுருவப் படத்தை ஏற்றி ஊர்வலம் நடைபெற்றது. சித்தாந்த வகுப்பைச் செம்மையுற நடத்திய பேராசிரியர்கள் இருவர்—சித்தாந்த சிரோன்மணி திரு. தூ. சு. கந்தசாமி முதலியார், சித்தாந்த பண்டிதர் திரு. ப. இராமநாத பிள்ளை ஆகியோரை, அணிசெய்த இன்பத் தேர் ஒன்றில் அமர்வித்து, முன்னே மெய்கண்டார் திருவுருவப் படம் தாங்கிய யானை மிடுக்கொடு செல்ல, அதன் பின் இன்னியங்கள் முழங்க, அதன்பின் திரு. மு. சுப்பிரமணியன் செட்டியார் திருமுறைப் பாடசாலை மாணவியர் தேவார இசைக்குழு (பஜனைக் கோஷ்டி) செல்ல, அதன்பின் வீரை. சுந்தர ஓதுவாமூர்த்தியவர்களின் செந்தமிழ்த் தேவார இசைக்குழு செல்ல, அதன் பின் திருவாசக முழக்கத்துடன் மகளிர்கள் செல்ல,



அதன்பின் சித்தாந்தப் பேராசிரியர்களாகிய விழாச் செல்வர்கள் அமர்ந்த இன்பத்தேர் (Pleasure-Car) மெதுவாக நகர்ந்து செல்ல, அதன்பின் சித்தாந்த வகுப்பு மாணவர்கள் திருவாசகப் பாராயண முழக்கொடு செல்ல ஊர்வலம் பல்லாயிரக் கணக்கான மக்கள் வெள்ளத்திடையே பேராரவாரத்துடன் நடைபெற்றது.

விழாச் செல்வர்களைப் பாராட்டுமுறையில் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகமுன்னர், துறைசையாதீன மடாலயத்தின் முன்னர், காசுக்கடை மகமைக் கட்டடத்தின் முன்னர், திரு. மு. சு. செட்டியார் ஆயத்த அணிகல அங்காடிமுன்னர் வளைவுகள் அமைத்துத் தோரணங்கள் கட்டி வரவேற்றமை குறிப்பிடத் தக்கனவாகும். ஊர்வலம் நெல்லைத் தேரோடும் திருவீதிகள் நான்கன் வழியாகவும் வந்து, சுவாமி சந்நிதியிலிருந்து

நெல்லையப்பர் பெருவழி வாயிலாகத் தருமபுரமடத்தை அடைந் தது. ஊர்வலம் வரும்போது நெல்லைச் செல்வர்களும் தமிழன்பர்களும் சைவப் பற்றுடையாரும் விழாச் செல்வர்கள் இருவர்க்கும் மாலையணிந்து மரியாதை செய்து மகிழ்ந்தனர். ஊர்வலம் தருமபுரமடத்தை யடைந்ததும் விழாச்செல்வர் இருவரும் இன்பத்தேர் விட்டிறங்கிக் கட்டிளங் காளைகள்போலப் - புது மணமக்கள் போலக் காட்சியளித்தார்கள். அவர்களின் கண்கொள்ளாக் காட்சியில் கருத்தைப் பறிகொடுத்த அறிஞரெல்லாம் அடிபணிந்து திருநீறணிந்து நின்மலனை வாழ்த்திச்சென்றனர்.



பாராட்டு

20—5—52 மாலையில் சித்தாந்த வகுப்பு நிறைவு விழாவும் சித்தாந்தப் பேராசிரியர் திரு. தூ. சு. கந்தசாமி முதலியார் அவர்கள் மணிவிழாவும் தொடங்கின. விழாவிற்குக் குன்றக்குடி—திருவண்ணமலை யாதீனம் மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணசலதேசிக சுவாமிகள் தலைமை தாங்கினார்கள். மகாசந்நிதானம் அவர்கள், தம் ஆதீனச் சார்பில் சித்தாந்தப் பேராசிரியர் திரு. தூ. சு. கந்தசாமி முதலியார் அவர்கட்கு இருநூறு ரூபாய் பெறுமான விலையுயர்ந்த பொன்னாடை போர்த்தி, வெள்ளித்தட்டு ஒன்றும் பரிசாக வழங்கியருளினார்கள். சித்தாந்த பண்டிதர், திரு. ப. இராமநாத பிள்ளையவர்களுக்கும் அடிகள் பொன்னாடை போர்த்தினர். பின்னர்ச் சைவசித்தாந்த சங்கத்தார் சார்பில் இரு பேராசிரியர்கட்கும் பொன்னாடை போர்த்தி, இன்னருள் வாழ்த்துக்களைப் பெருமகிழ்வொடு வழங்கியருளினார்கள். திருப்பனந்தாள் ஆதீனத்தலைவர் அவர்கள் வழங்கியருளிய பொற்கிழியைச் சித்தாந்தப் பேராசிரியர் மணிவிழாச் செல்வர் திருவாளர்—முதலியார் அவர்கட்கு மகாசந்நிதானம் அவர்கள் தம் மலர்க் கரத்தால் வாழ்த்தி வழங்கியருளினார்கள். சங்கர்ப் பஞ்சாலை

பதிபர் திரு. சி. ச. அருணுசலம் பிள்ளையவர்கள் அன்புப் பரிசாக வழங்கிய ஒரு பொன்னையும் மகாசந்நிதானம் அவர்கள், முதலியார் அவர்கட்கு வழங்கியருளினூர்கள். சங்க அமைச்சர் திரு. வ. சுப்பையா பிள்ளையவர்கள், மகாசந்நிதானம் அவர் கட்கும், மணிவிழாச் செல்வர் திரு. முதலியார் அவர்கட்கும் உயர்ந்த கட்டடத்தைக்கொண்ட சிவஞானபோத மாபாடிய நூலைத் தனித்தனி அன்புக் காணிக்கையாகக் கொடுத்தார்கள்.

பின், திருப்பனந்தாள் ஆதீனத் தலைவரவர்கள் அனுப்பி யருளிய வாழ்த்துச் செய்தியையும் படித்தார்கள். அவ்வாழ்த் துச் செய்தி கீழே தரப்பெற்றுள்ளது :—

## திருப்பனந்தாள் திருமுகம்

Ref. No. ஏ. 1128/51-52 Encl...............

செந்திலாண்டவன் துணை.

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி (தஞ்சாவூர் ஜில்லா)
அருள் நந்தித் தம்பிரானவர்கள் தேதி 9 ஏப்பிரல், 1952
திருப்பனந்தாள்.

திரு. வ. சு. சுப்பையா பிள்ளை அவர்கட்கு செந்திலாண்ட வன் திருவருள் முன்னிற்க.

தங்கள் 31—3—52௨ தேதியிட்ட கடிதமும் சித்தாந்த வகுப்பு அறிக்கையும், தாங்கள் 27—4—52 முதல் 20—5—52 வரை சிவஞானபோத வகுப்பு நடத்த எடுத்துள்ள முயற்சியும் இப்பாட வகுப்பு ஆசிரியருக்கு 60-ம் ஆண்டு நிறைவு நாளை ஒருங்கே கொண்டாட எண்ணியுள்ளமையும் பாராட்டற் குரியன.

சித்தாந்த வகுப்பு முதலியன நடத்துவதற்குப் பொருள் உதவிவேண்டி எழுதி இருக்கிறீர்கள். நம்மால் இத்துடன் இணைத்துள்ள உண்டியல் 60-ஆண்டு நிறைவுறும் திரு. து. சு. கந்தசாமி முதலியார் அவர்கட்கு அளித்தற்பொருட்டே பயன் படுத்தவும். மற்ற செலவினங்கட்குப் பிற செல்வந்தர் அளிக் கும் நன்கொடைத் தொகைகளைப் பயன்படுத்துக.

பாராட்டப்பெறும் அன்பர் அறுபதாண்டு நிறைவுபெறும் திருவாளர் து. சு. கந்தசாமி முதலியார் மிகுந்த சைவப் பற் றுடையவர்; சாத்திரத்திலும் தோத்திரத்திலும் மிக்க பயிற்சி யுடையவர்; தம் வாழ்நாளைச் சைவப் பணியிலேயே சிறப்

பாகக் கழிப்பவர்; சைவ உலகு அன்னார் தொண்டினைப் போற்றக் கடமைப்பட்டுள்ளது. அவர்கட்கு அன்பளிப்பாகக் கும்பகோணம் இம்பீரியல் பாங்கு 19805 எண்ணுள்ள 500-0-0 ரூபாவுக்குரிய உண்டியலொன்று இத்துடன் அனுப்பப் பெற்றுள்ளது. இவ் வுண்டியலை விழாவில் அவர்கட்குச் சேர்ப்பிக்கவும்.

பாராட்டிடம்: பாராட்டிடம் எங்கள் தருமையாதீனத்துச் சிந்துபூந்துறை மடமாகும்; தமிழ்ப் பணியும் சைவப்பணியும் தமிழ்நாடெல்லாம் பரப்பிய ரஜித ஸபா நாயகர் என்ற வெள்ளியம்பலவாண முனிவர் தங்கியிருந்த இடம்; வீரசைவாதீனத்துக் கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச சுவாமிகள் வெள்ளியம்பலவாண முனிவரிடம் இலக்கணம் நிரம்பப்பெற்ற இடம். இத்தகைய சீரும் சிறப்பும் பெற்ற இடத்தில் இப் பாராட்டுக் கூட்டம் நடைபெறுவது மிகப் பெருமை யளிப்பதாகும்.

அன்பர் திரு. தூ. சு. கந்தசாமி முதலியார் பல்லாண்டு வாழ்ந்து தமிழுலகுக்குச் சைவப்பணி புரிவாராக. செந்திலாண்டவன் திருவருள் துணை செய்வதாக. சுபம்.

மகாலிங்கத் தம்பிரான்.

**சான்றிதழ், பரிசு வழங்கல்**

பின்னர்ச் சித்தாந்த வகுப்பில் பயின்று தேர்ச்சி பெற்றார்க்கெல்லாம் சங்கத்தார் சான்றிதழ்களை மகாசந்நிதானம் அவர்கள் வழங்கி, அம் மாணவ அறிஞர்களை வாழ்த்தியருளினார்கள்.

பின்பு, நாடகங்களிலும் இடை நிகழ்ச்சிகளிலும் நாள்தோறும் கலந்துகொண்ட அன்பர்கள் அனைவர்க்கும் சிறுவர் சிறுமியர் அனைவர்க்கும் சங்கத்தார் உவந்தளித்த நூற்பரிசுகளை, மகாசந்நிதானம் அவர்கள் வழங்கியருளினார்கள். நெல்லைமாவட்டச் சிறப்பு முறைமன்றத் தலைவர் உயர்திரு. வி. சுப்பிரமணிய நாடார் அவர்கள்சித்தாந்தப் பேராசிரியர்கள் இருவரையும் பாராட்டிச் சிற்றுரை யொன்று நிகழ்த்தினார்கள்.

சங்கத்தார் வழங்கிய பாராட்டு மலர்களைத் திரு. வே. மாணிக்கவாசகம் பிள்ளையவர்கள் படித்தளித்தார்கள். சித்தாந்த வகுப்பு மாணவர்கள் சார்பில் இருபெரும் சித்தாந்த ஆசிரியர்கட்கும் பாராட்டுமலர்கள் வாசித்து வழங்கப்பெற்றன. மாணவர்கள் இரு பேராசிரியர்களையும் ஒரு பேரன்பால் சாலைத் திருக்குமரன் வழிபாட்டுடன் நீறணியத்துணையாம் வெள்ளிக்

குவளை இரண்டு நல்கிப் பாராட்டினர். மகாசந்நிதானம் அவர்கட்கு வரவேற்புமலரைக் கழகத்தலைவர் திரு. மு. காசிவிசுவநாதன் செட்டியார் அவர்கள் படித்து அளித்தார்கள். இறுதியில் மகாசந்நிதானம் அவர்கள் சித்தாந்தப் பேருரையொன்று வழங்கியருளினார்கள்.

இத்துடன் சித்தாந்த வகுப்பு நிறைவுவிழாச் சிறப்புற நிறைவெய்தியது.

**அடிகள் பாராட்டு**

மறுநாள் அருணகிரி இசைக்கழகத்தார் மகாசந்நிதானம் அவர்கட்குப் பாராட்டுவிழா ஒன்று நிகழ்த்தினர். அவ் விழாவில் மகாசந்நிதானம் அவர்களின் திருவுள்ளப்படி திருவாசக விழாவும் ஒரு பகுதியாக இடம் பெற்றது. மகாசந்நிதானம் அவர்கட்குப் பாராட்டுமலர், கழகத்தலைவர் திரு. S. S. பிள்ளையவர்கள் படித்தளித்தபின் திருவாசக விழாத் தொடங்கிற்று. குன்றக்குடி—திருவண்ணாமலை யாதீன நிருவாகி திரு. கு. ம. சுப்பிரமணியம் M. A. அவர்கள் திருவாசகச் சிவபுராணத்தை ஓதிப் பந்தலில் இருந்த மக்களெல்லாம் தொடர்ந்து ஓதுமாறு செய்தார்கள். பின்னர்த் திருவாசகத்தைப்பற்றிக் கழக விரிவுரைப் பொறுப்பாளர் திரு. அ. க. நவநீதகிருட்டிணன் விரிவுரையொன்று நிகழ்த்தினார்கள். சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியரும் ஆதீனப் புலவருமாய திரு. அ. ச. ஞானசம்பந்தனார் M, A. அவர்கள் 'பழந்தமிழர் கடவுட் கொள்கை' என்னும் பொருள்பற்றி விரிவுரையாற்றினார்கள்.

இறுதியில் மகாசந்நிதானம் அவர்களின் திருவாசகப் பேருரை நிகழ்ந்தது. விழாத் தொடக்கத்தில் நிகழ்ந்த திருக்குறள் இசைக்குழுவுலா நிகழ்ச்சியைக் கண்டு மகிழ்ச்சியுற்ற மகாசந்நிதானம் அவர்கள் கழகத்தாரை உள்ளங்கனிந்து அருண்மொழிகளால் வாழ்த்தி, நூற்றுப்பதினொரு ரூபாய் பெறுமான வெள்ளிக் கூசாவொன்றைக் கழகத்திற்குப் பரிசாக வழங்கி யருளினார்கள்.

'அறுகயிறாசல்' என்னும் சித்தாந்த நாடகத்துடன் விழாச் சிறப்புற நிறைவேறியது.

**நன்றி**

சித்தாந்த வகுப்பு நாட்களில் மாணவர்க்கும் விரிவுரையாற்றுதற்கு வரும் புலவர்கட்கும் உணவு வசதியைச் செய்து கொடுக்கும் அரும்பணியையாற்றிய அருணகிரி இசைக் கழக உணவு அமைச்சர் திரு. அ. ஆ. சுப்பிரமணியம் அவர்கள், அவர்

கட்குத் துணையாக நின்ற தொண்டர்கள் ஆகியோருடைய பணிகள் பெரிதும் பாராட்டற்குரியன. குறித்த காலந்தவருமல் உணவை யமைத்துத் தாய்போல் நின்று தனிப்பெருஞ் சுவை யுடன் ஊட்டிய திறம் போற்றற்குரியதாகும். அம்மட்டோ திரு. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் உணவு ஆக்கல், படைத்தல் எல்லாவற்றிற்கும் பயனுகக்கூடிய பல்வேறு கலன் (பாத்திரம்) களை உவந்தளித்தமைக்கு அன்பொடு நன்றி தெரிவிக்கின்ரேம்.

சித்தாந்த வகுப்பில் கலந்துகொள்ளுவோரும் சித்தாந்த ஆசிரியர் அவர்களும் தங்குதற்கு உறையுளாக, நெல்லை இந்துக் கல்லூரிக் கட்டிடங்களை உவப்புடன் உதவியருளிய கல்லூரிச் செயலாளர் திரு. இராமசாமிக்கோனுர் அவர்கட்குச் சங்கம் மிக்க நன்றி செலுத்துகின்றது.

வகுப்புத் தோற்றத்திற்குக் காரணராயிருந்த திருவாளர் கள் சிந்துபூந்துறைச்செல்வர் திரு. ஓ. சொரணம் பிள்ளையவர்கள், திரு. A. R. சண்முகம் பிள்ளையவர்கள், திரு. T. M. வள்ளிநாய கம் பிள்ளையவர்கள், திரு. சி. ச. அருணுசலம் பிள்ளையவர்கள், திரு. மு. சுப்பிரமணியம் செட்டியார் அவர்கள் ஆகியோர்க்குச் சங்கம் மனம் நிறைந்த நன்றியைச் செலுத்துகின்றது.

திண்டுக்கல் நகராட்சி ஆணையர் உயர்திரு. A. C. கந்தப்ப பிள்ளையவர்கள் அகத்திருள் நீக்கும் புறத்துருவாம் பழனித் தூய வெண்ணீற்றுப் பொதியிரண்டும், அந்நீறணிவார் உள்ளத் தின்பனைய மலைவாழைப்பழம் ஐந்நூறும் நன்கொடையாக நல்கினமைக்குச் சங்கம் நன்றி செலுத்துகின்றது.

திருநெல்வேலித் திருக்கோயில் அறநிலையாளர்கள் மெய் கண்டார் திருவுருவ ஊர்வலக் காட்சிக்கு அணிசெய் யானையும் பிறவும் அன்போடளித்தனர். அவர்கட்கும் சங்கத்தின் நன்றி உரித்தாகுக.

விருந்து

சிந்துபூந்துறைச் செந்நெறிச்செல்வர் திரு. தி. மு. வள்ளி நாயகம் பிள்ளையவர்கள் தாமும் தங்கள் வாழ்க்கை அருந்தமிழ்த் துணைவியாரும் நாடொறும் சித்தாந்த வகுப்பிற் கலந்து மெய் கண்டார் மெய்யுணர்வுப்பேற்றைச் செவிமடுத்து உளங் கொண்ட உவப்பால் ஆசிரியர்கட்கும், மாணவர் பல்லோர்க்கும், நண்பர் உறவினர்கட்கும் தங்கள் வளமனையகத்து நால்வகை யுண்டி அறுவகைச் சுவையுடன் சிறந்த விருந்தொன்றளித்தார் கள். அதனை ஆசிரியரும் பிறரும் மிகவும் பாராட்டி விரிவுரை ஆற்றினர்.

வகுப்பு நாள் ஒன்றில் மாணவர்க்கெல்லாம் அறுசுவைப் பெரு விருந்தூட்டி மகிழ்வித்த செல்வர் திரு. சி. ச. அருணாசலம் பிள்ளையவர்கட்குச் சங்கம் தனித்தவொரு நன்றி செலுத்துகின்றது. அவர்கள் விருந்தில் ஊட்டிய உணவு வகைகளைக் காட்டும் பாட்டுக் கீழே தரப்பெற்றுள்ளது

## விருந்துப் பாடல்

**தேம்புகழ்சேர் நெல்லைச்சித் தாந்தத் திருவகுப்பின்
மேம்புகழ்சேர் சீர்சால் விருந்து.**

சேம்பொருட் சித்தாந்தந் தேருந் திருவுளத்தீர்
உம்பர் உவக்கும் உணவின் உறுசுவையும்
நம்பன் அருள்போல் நலங்கனிந்த நற்பண்பும்
இம்பர் அருளுலகின் ஏற்றம் இயல்நலமும்
சாலும் வகைநினைந்து சான்ற திருவிருந்தின்
ஏலும் பொருள்வகைமை கேட்பீர் இனிதாக
அன்னை ஒளிகாட்டும் அன்பார் இலைவிரித்து
இன்பப் பொருளுப் பினிதே முதல்வைத்து
மோட்டுக்கோ சுத்துவரம் முன்னுஞ் சுவையவியல்
கட்டுருளை நற்கிழங்குக் கூட்டுங் கனிவொளியாஞ்
செங்கிழங்கு சேர்ந்து திகழ்தயிர்ப் பச்சடியும்
எங்கும் புகழ்முல்லை என்னுந் திருச்சோறும்
தேங்கம்பாற் றேங்குழம்பும் சீர்மிகுந்த தக்காளி
நன்மிளகுச் சாறும் நறுநெய்பருப் பப்பளமும்
இன்சுவை சார்மிளகின் ஏற்றந் திகழ்வடையும்
மாக்கோடித்தேங் கூழும் மகிழ்தயிரும் நீர்பழமும்
தேக்குஞ்சேம் முள்ளங்கி ஊறுகாய் சேர்த்தலுடன்
ஆறு வகைநெறியும் உட்கொண்டப் பாலிலகுந்
தேறுஞ் சிவநெறிபோல் தேர்ந்த சுவைகலப்ப
உண்பீர்! உண்பீர்! உண்பீர்! என்ன உவந்தழைத்தேன்
பண்பீர்! இனிய பரந்த அறிவுடையீர்!
நண்பீர்! இனிதுவந்து நாட்டுக்கும் செந்தமிழ்க்கும்
வேண்டுவே வேண்டுவே எல்லாம் மிகப்புரிவீர்
ஈண்டிய அன்பால் இசைந்து.

19—5—52. அன்பன், சி. ச. அருணாசலம்.

## சித்தாந்த வகுப்பு நிறைவுநாளில் சங்கத்தார் நடத்திய நல்விருந்துப் பாடல் கீழே உள்ளது

### தென்னிந்திய சைவசித்தாந்த சங்கம்
### நெல்லைச் சித்தாந்த வகுப்பு நிறைவுநாள்

### நீள்சுவை விருந்து

தித்திக்கும் முத்தமிழும் முழங்குந் திருமடத்தில்
எத்திக்கும் போற்ற இனிதிருந்து சித்தாந்தத்
தெள்ளமுத மாந்திமிகத் திகழும் அரும்புலவீர்!
உள்ளநிறை அன்பின் உவந்தளிக்கும் பெருஞ்செல்வீர்!
பச்சை மணித்தகட்டைப் பரப்பினேம் விருப்புடனே
இச்சை நறுஞ்சுவையை யீயும் கடற்பொருளே
நித்திலக் கூலமட்ட நெகிழும் சுவைப்பொருளே
செத்தியமோட் டுக்கோசின் தீங்கூட்டுப் பாங்கவியல்
உருண்ட சுவைக்கிழங்கின் உயர்பொரியல் மாங்தோக்கு
திரண்ட இருங்கதலி வறுவல்வெள் ளப்பளமே
வாள்வரிக் கோடுங்காய்சேர் வளமான தயிர்ப்பச்சடி
நீள்கா யுறுகுழம்பு நெய்பனிநீர் சேர்சாறு
சிவனொளிரு மலையென்னத் திகழ்வெண்சோற் றுக்குவியல்
நவையறுதீம் பாற்குறுநோய் நற்கூழ்சிற் காயின்வடை
முக்கனிகள் தக்கதயிர் மிக்காறு நீருண்பீர்
எக்காலும் மறக்காத இனியஉண வுட்கோள்வீர்
தக்கார்கள் போற்றவுயர் சித்தாந்தம் தான்வளர்ப்பீர்
முக்கட்பே ரீசனருள் மூதுலகில் பெற்றுய்வீர்
வளங்கள் மிகப்பெருகி வாழிய! நீர் பல்லாண்டே.

---

20—5—52. சங்கத்தார்.

*அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து*
*நல்விருந்து ஓம்புவான் இல்.*
—திருக். விருந்து - ௪.

# நெல்லை அருணகிரி இசைக்கழக முத்தமிழரங்கக் காட்சி

சிந்துபூந்துறைத் தருமபுர மடாலயத்தின் முன்னிடம். மூவாயிரம் மக்கள் இருந்து சொற்பொழிவு கேட்டற்கேற்ற விரிந்து பரந்த பெருமுன்றில். படர்ந்து செழித்த வேம்புயர்ந்த விரிமுன்றில். அப்பெருவெளியில் தருமபுர ஆதீனம் மகாசந்நிதானத்தின் கருணையால் அமைக்கப்பெற்ற பெரும்பந்தல் வடதிசை நோக்கிய பெரிய மேடை. இயல் இசை நாடகம் ஆகிய முத்தமிழும் முழங்கிக்கொண்டிருக்கும் தண்டமிழ்ப் பேரரங்கம். அவ் அரங்கின் முன்திரை பொன்திரையாகப் பொலிவுற்றுத் திகழும். அம் மெல்லிய திரை இருபாலும் விலகிற்று என்றால் அரங்கில் சொற்பொழிவு நிகழ்ச்சிகள் துவங்கும். அதன்பின் உள்ள வெண்திரை விலகிற்று என்றால் சிறியதொரு இடை நிகழ்ச்சி இன்பக்காட்சி நடைபெறும். அதன் பின்னுள்ள கருந்திரையும் செவ்வானத் திரைகளும் விலகினவென்றால் நாடகக் காட்சிகள் நடைபெறும். அத்திரைகள் திறப்பதும் மறைப்பதும் காண்பதற்கே சிறப்புடைய காட்சியாக விளங்கும். வெளித்தோற்றத்தில் மின்விளக்குகளால் அணிசெய்யப்பெற்ற நாடகவரங்கமாக அம்மன்றம் காட்சியளித்ததாயினும் திரை விலகும் காட்சியே நடைபெறப்போகும் நிகழ்ச்சியை மக்களுக்கு நன்கு அறிவுறுத்திவிடும்.

சொற்பொழிவாளர்கட்குப் பேசும் காலவெல்லையைக் காட்டச் செவ்விளக்கு மிளிர்வதும், மின்சார மணி யொலிப்பதும் பந்தலில் இருப்பார்தம் சிந்தைக்குக் கிளர்ச்சி தருவனவாகும்.

இம் மேடையில்தான் சித்தாந்த வகுப்புச் சொற்பொழிவு நிகழ்ச்சிகளும், நாடகம், வில்லிசை, நடனம், இசைச்சித்திரம் போன்ற சுவைமிக்க நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

---

# * வரவேற்பு மலர்

**ஞானவொளி பரப்பும் ஞாயிறே!**

வந்தருள்க! வந்தருள்க! அடியவர் உள்ளக் கமலமெல்லாம் செந்தேன் பிலிற்றி மலர வந்தருள்க! மக்கள் மனமெல்லாம் மெய்ஞ்ஞான வொளிமேவச் செஞ்ஞாயிறென ஞானக்கதிர் விரிக்கும் தங்கள் பொங்குபேரொளி கண்டு தாளிணை பணிகின்றோம்.

**சைவப்பயிர் தழைக்கவந்த தெய்வப் பெருமுகிலே!**

நாடெங்கும் சமயவுணர்ச்சி குன்றிவரும் இந்நாளில் ஞாலமுய்ய வந்த ஞானசம்பந்தப் பெருந்தகையைப்போல் எழுந்தருளிச் செல்லுமிடமெல்லாம் சிவமணம் பரப்பும்—தெய்வத் தமிழ்மணம் விரிக்கும் தங்கள் திருவருளைத் தலைக்கொண்டு போற்றுகின்றோம். கண்டாரை வசப்படுத்தும் தங்கள் கனிந்த வாயழகும், தண்டாத பேரொளி தழைக்கும் தங்கள் தண்டாமரைத் திருமுகமும், தூயவெண்ணீறு துதைந்த பொன்மேனியும், சிவவொளி பரப்பும் தவப்பெருங் கோலமும், அன்பர் உள்ளம் விட்டகலாக் கட்டிளமைப் பேரழகும் என்றும் மாறாது நின்று இன்பமழை பொழிவனவாக!

**திருவாசக மணம் விரிக்கும் திருவருண் மலரே!**

தமிழ்நாட்டின் தலைசிறந்த தத்துவக்கலைப் பேழையாகிய மணிமொழி மாண்பை மாநிலமெங்கும் பரப்பிவரும் தங்கள் பைந்தமிழ்ச் சிவத்தொண்டை நினைந்து நினைந்து வியந்துவியந்து போற்றுகின்றோம். சைவசித்தாந்த மெய்ஞ்ஞான உண்மைகளை மேலைநாட்டறிஞர் கண்ட விஞ்ஞான உண்மைகளுடன் கேட்டார்ப் பிணிக்கும் தகைவாய்க் கேளாரும் வேட்பமொழியும் தங்கள் வியத்தகு திறத்தினைக்கண்டு, கழிபேருவகை கொள்கின்றோம். பல்லாற்றானும் சைவப்பயிர் தழைக்கத் தண்ணருள் தெய்வமழை பொழிந்துவரும் தாங்கள் சைவசித்தாந்தம் பயில இவண் வந்த செந்தமிழ் அறிஞர் பெருமக்களை வாழ்த்தியருளப் பணிந்து வேண்டுகின்றோம். தங்கள் அருள் வாழ்த்தால் சித்தாந்த ஞானம் இப்பேரறிஞர்கள் வாயிலாக நாடெங்கும்—உலகெங்கும் பரவி, நம் தலைசிறந்த சைவசமயம் தழைத்தோங்கும் என்னும் எண்ணமுடையோம். தங்கள் திருவருள் எங்கள்பால் பொங்கிப் பெருகுவதாக! சைவமும் தமிழும் என்றும் குன்றாது நின்று ஓங்குவனவாக. திருவடிகட்கு அடியேங்கள் வணக்கம்.

நெல்லை,<br>20—5—52.

இங்ஙனம்,<br>**தென்னிந்திய சைவசித்தாந்த சங்கத்தார்.**

---

* தென்னிந்திய சைவசித்தாந்த சங்கத்தார் நெல்லைத் தருமபுர மடாலயத்தில் நிகழ்த்திய சித்தாந்த வகுப்பு நிறைவுவிழாவிற்கு எழுந்தருளி வாழ்த்தியருளிய குன்றக்குடி - திருவண்ணாமலையாதீனம் மகாசந்நிதானம் மறைத்திரு. தெய்வசிகாமணி அருணாசலதேசிகர் அவர்கட்கு அளிக்கப்பட்டது.

# * பாராட்டு வாழ்த்துப் பாமாலை

பொங்கெழில் வளனும் பொன்சேர் புகழ்ப்பொழில் நலனும் மல்கி
இங்குளார் இயம்பும் வண்ணம் இறைவன்பேர்க் கெதுகை யான
கங்கர கோட்டை ஊர்வாழ் கணக்கினர் கனிந்த அன்பர்
எங்கெங்கும் போற்றுந்தன்மை இயல்பினர் இனிமை சான்ற (௧)

சுப்பிர மணிய அண்ணல் சுப்பம்மாள் என்னும் அன்னை
எய்ப்பில்சீர்த் தவத்தால் வந்தோர் யாவர்க்கும் இனிய அன்பர்
செப்பமும் சீரும் மல்குந் திறலினர் தெளிந்த உண்மை
முப்பொருள் உணர்த்துஞ் சீர்த்தி முகிழ்கந்த சாமி அண்ணல் (௨)

நந்தனப்பேர் நல்லாண்டு முதற்றிங்கள் புதன்கிழமை சோதி நாளின்
செந்தமிழின் திறன்வளர்க்கும் சீர்பெருகத் தோன்றியநம் சீர்சால் வல்
உந்துபுகழ்ச் சேதுபதி உயர்பள்ளி தனில்மதுரை யூரார் போற்ற [லோர்
முந்துநல்ல குத்தாலம் பிள்ளையிடம் தமிழ்பயின்ற முதன்மையாளர் (௩)

கல்லூரி தனில்தமிழைப் பயில்கின்ற காலத்தில் கனிந்த அன்பால்
பல்லூர்க்கும் போயங்கண் பயன்தருசொற் பொழிவுசெயும் பான்மை
நல்லபுகழ் ஆசான்வேங் கடசாமி நாட்டார்நாட் டாரும் போற்ற [யாலே
எல்லீரும் கேட்கவென நகுநயத்தால் தமிழியம்பும் ஏற்றம் பெற்றார் (௪)

கூட்டுறவுக் கழகத்தில், உயர்பள்ளிக் கூடத்தில், குறைவில் லாத
நாட்டுநலன் பேணுகின்ற நல்வகைசேர் இயக்கத்தில் நாளும் நன்மைத்
தேட்டுமிகு சாத்தூர்ச்செந் தமிழ்ச்சங்கத் தினும்மற்றுந் திறமை சான்ற
ஈட்டுபுகழ்த் தலைமைபல நெடுங்காலம் நனிபெருக இயைவ செய்தார் (௫)

பாங்குமிகு செந்தமிழில் எம்.எப்பட் டம்பெற்ற பண்பின் மிக்கார்
ஆங்கிலத்தில் பெரும்புலவர் அரியபெரு வழக்கறிஞர் ஆற்றல் மல்கித்
தேங்குபுகழ்த் திருக்குறளில் திருத்தொண்டர் புராணத்தில் தெளிநுண்
[வல்லார்
ஈங்குமிகு மெய்கண்ட நூற்பொருள்கள் நனியுணர்ந்த இயல்பின் மிக்கார்

---

* தென்னிந்திய சைவசித்தாந்த சங்கச் சார்பில் நெல்லைத் தருமபுர மடாலயத்தில் சித்தாந்த வகுப்பு ஆசிரியராக இருபத்தொரு நாட்கள் இனிய முறையில் வகுப்பை நடாத்திய சித்தாந்தப் பேராசிரியர் உயர்திரு. தூ. சு. கந்தசாமி முதலியார், எம். ஏ. அவர்கட்கு அளிக்கப்பட்டது.

தன்னலமே கருதாது தமிழ்க்குழைத்த தகைசான்ற சால்பின் வள்ளல்
பன்னலத் தண்ணுமலைப்பல் கலைக்கழகம் வேண்டியசீர்ப் பான்மை யாலே
நன்னலஞ்சேர் காசியிற்பல் கலைக்கழகம் வியப்பெய்த நலத்தின் மிக்க
தொன்னலஞ்சேர் சித்தாந்தம் ஆங்கிலத்திற் சொற்பொழிந்த தூய வல்லோர்

குடமொழியை வடமொழியைத் தமிழ்மொழியைக் கற்றுணர்ந்த குறிப்பி
[ னாலே
கடல்கடந்து கொழும்புமுதல் யாழ்ப்பாணம் வரைசென்று கனிவின் மிக்க
அடலரியே றெனநின்று பல்முறையுந் தமிழ்பொழிந்த அன்பின் வல்லார்
படர்விருதைக் காரைக்கால் அம்மைசங்கச் சித்தாந்தம் பகர்ந்த வள்ளல் ()

வல்லபுகழ் நல்லண்ணு மலைப்பல்கலைக் கழகத்தின் வாய்ப்பு மிக்க
நல்லதமிழ் ஆராய்ச்சிக் குழுப்பார்வை உறுப்பினராய் நன்மை செய்தார்
வெல்லுபுகழ்த் தமிழ்ச்சைவ சித்தாந்தக் கழகத்தின் மிகுந்த மேன்மை
பல்கும்வகை இயக்குநராய்ப் பல்லாண்டு பணிபுரிந்த பண்பார் அன்பர் (௯)

மூவெழுநாள் முப்பொருளின் உண்மைநலம் பலர்கேட்க முறைமையாலே
பாவெழுசீர் மெய்கண்ட தேவனருட் சிவஞானப் பனுவற் பண்பு
தேவெழுந்து துணைபுரிய அருள்மலியச் செப்பியசீர் தெளிந்த வள்ளால்!
நாவெழுந்த சொல்லாலே நுமதுபுகழ் நலமுழுதுஞ் சொலவல் லேமோ ()

வாழியசீர்ப் புகழ்க்கந்த சாமியண்ணல் மகிழ்பெருக வாழி வாழி
வாழியசீர் நற்றொண்டை மண்டலவே ளாளர்குல வள்ளால் வாழி
வாழியசெந் தமிழ்வளர்த்த வழக்கறிஞ வல்லோனே! வாழி வாழி
வாழியநம் நெல்வேலி வடிவம்மை யருளாலே வளத்தால் வாழி (௧௧)

சித்தாந்தச் செல்வம் வழங்கித் திருவருளின்
உய்த்துக்கொண் டேயிருக்கும் உண்மையினல்—மெய்த்தவத்தின்
சாத்தூரின் வாழ்கந்த சாமியருள் நற்புகழை
ஏத்துவார்க் கென்றும் இனிது.

நெல்லை,
20—5—52. }

தென்னிந்திய சைவசித்தாந்த சங்கத்நார்.

தென்னிந்திய சைவசித்தாந்தக் கழகப் புலவரும்
நெல்லைச் சைவசித்தாந்த வகுப்புப் பேராசிரியருமான
**உயர்திரு. ப. இராமநாத பிள்ளையவர்களுக்கு**
மனமுவந்து நல்கிய

# இயன் மொழி வாழ்த்து

1. திருமிகுதன் றிரைக்கரத்தாற் கோடையினும்
பொருநையெனுஞ் செவிலித் தாய்தன்
பெருமகிழ்வோ டடியவற்கா இறைசுரக்குந்
திருவருள்போற் பெருகு நீராம்
உருவளரச் செய்திடுபா லமுதூட்டி
மகவாக வுவந்து காக்கும்
வருபுகழ்சேர் நெல்லைமா வட்டமுறு
குலசைநகர் வாழ்க மாதோ

2. செந்தமிழுஞ் சிவனெறியும் அறவழியும்
உறுபொருளுஞ் சேர்ந்த சீர்த்தி
இந்தநக ரிடைச்சைவ வேளாளப்
பரமசிவ வந்த லென்பான்
சிந்தைமகிழ் இலக்குமியோ டறம்வளர்க்க
முன்னாளிற் செய்த வன்னோர்
தந்தவமே யுருவாக வருராம
நாதப்பேர்ச் சான்றோய் கேண்மோ

3. ஒருநாளும் ஆசிரியர் ஓதுவியா
தருங்கலைக ளோதி யோதி
வருநாளி லொவ்வொருவர் மனைதோறுங்
கற்பிக்க வலியச் சென்றே
அருநாள்கள் பலமுயன்று நின்னூரார்
செந்தமிழை யறியச் செய்தாய்
பெருநாவ லோய்!நின்போற் கடமைசெயிற்
றமிழ்நொடியிற் பிறங்கு மன்றே.

4. ஈழநா டுறைதமிழர் தமைத்தமிழ்ப்பூம்
பொழில்நடுவ ணீர்த்துச் சென்று
வாழநீ வழிவகுத்தாய் வலம்புரியிற்
றமிழ்வளர்த்தாய் வாயால் யாருந்
தாழநீ பேசுகிலாய் தமிழிலுள
நூல்வகைகள் சார்ந்து செல்லும்
பேழைபோ லுளநின்றன் றகைமையெலாம்
யாமெங்ஙன் பேசு கிற்பேம்.

5. பல்லாரும் எத்தெடுக்குஞ் சிவஞான
போதநூல் பயின்ற யாங்க
ளெல்லாரும் நனிவிளங்க வுவமைபல
வடுத்தடுத்தே யெடுத்துக் காட்டிச்
சொல்லாரும் ஐயங்கள் துடைத்தனையால்
மறப்பறியோந் தோன்றல் பங்கின்
நல்லாளும் எம்பரனும் அருள்செய்யப்
பல்லாண்டு நன்கு வாழ்க.

சித்தாந்த வகுப்பு **மாணவர்கள்.**

குன்றக்குடி - திருவண்ணாமலை யாதீனம் மகாசந்நிதானம்

திருப்பெருந்திரு.

தெய்வசிகாமணி அருணாசல தேசிக சுவாமிகள் அவர்கட்கு

# வரவேற்பு மலர்

சிவமணமும் தமிழ்மணமும் தெருவெல்லாம் கமழ்ந்தோங்கத்
தவமனத்தின் முனிவரெலாம் தலைமிசைச்செங் கரங்கூப்ப
நவையறுமின் னியங்கள்பல நசைமிகுவாழ்த் தொலியுடனே
பவமறமுன் னெழுந்தருளும் பரனருளின் தனியுருவே! 1

வடிவார்ந்த நற்றவமே! வளர்குன்றக் குடிவாழ்வே!
அடியேங்கள் செய்தவத்தால் அருளுடனிங் கெழுந்தருளிப்
படியோர்க்கு மெய்ஞ்ஞானப் பனிமழையைப் பொழிந்தருளி
மிடிதீர்க்கும் மேதகவை மிகப்பெரிது வியந்தேமால்! 2

தெய்வசிகா மணியருணா சலனருள்மெய்த் தேசிகராம்
செய்யவருள் பெருங்கடலே! திகழ்ஞானத் தவக்கடலே!
வையகஞ்செய் தவத்தாலே வரும்இன்பப் பெருங்கடலே!
செய்தவந்தான் எனைத்தென்பேம் திருவருளின் தனிவாழ்வே! 3

பண்ணார்ந்த மொழிஞான சம்பந்தப் பெருந்தகையைக்
கண்ணாரக் கண்டுமனம் கொண்டபெரு மகிழ்ச்சியைப்போல்
எண்ணற்ற பெருமகிழ்வு கொண்டேம்யாம் இனிதுவாழி!
தண்ணார்புண் ணியவாழ்த்துத் தந்தருளும் சிந்தைவாழி! 4

செந்தமிழின் தீந்தேனைத் தத்துவத்தின் சிகரமதாய்ச்
சிந்தையெலாம் உருக்குதிரு வாசகத்தைச் செகமெங்கும்
பந்தமறப் பரப்பியருள் தெய்வசிகா மணிவாழி!
சிந்தைகுடி கொண்டருளும் தேசிகனே! வாழியரோ!! 5

தருமபுரமடம், சிந்துபூந்துறை
நெல்லைச் சந்திப்பு
21—5—'52

தருமையருள்பெற
நெல்லை அருணகிரி இசைக்கழகத்தார்.

ஓம் சிவம்

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக

அறநிலையமாகிய

தென்னிந்திய சைவசித்தாந்த சங்கம்

## சித்தாந்த வகுப்புப் பயிற்சிச் சான்றிதழ்

நெல்லையில் தருமையருள்பெறு அருணகிரி இசைக்கழகத்தார் துணைகொண்டு தருமபுர மடத்தில் 1127-ம் ஆண்டு நந்தன சித்திரைத் திங்கள் 15-ம் நாள் (27-4-1952) முதல் வைகாசித் திங்கள் 7-ம் நாள் (20-5-'52) முடிய எழுமூன்று நாட்கள் சாத்தூர் வழக்குரைஞர் சித்தாந்த சிரோன்மணி திருவாளர் தூ. சு. கந்தசாமி முதலியார் எம். ஏ., அவர்கள் ஆசிரியராக இருந்து நடத்திய சித்தாந்த வகுப்பில் திருவாளர்..............................
..............................சிவஞானபோதச் சிற்றுரையினைப் பாடமாகப் ....................................................என்பதற்குச் சான்றாக இவ்விதழ் வழங்கப்பெறுகிறது.

24, கீழத் தேர்த்தெரு,
திருநெல்வேலி
20—5—1952

ஆசிரியர்
சங்கத் தலைவர்

# சிவப்பிரகாசர் செய்யுள் நலம்

[சுந்தர குமரன்]

ஐயன்மீர்! அம்மைமீர்!

சால வணக்கம். சிவப்பிரகாசர் இத் தருமபுரச் சந்திப்பு மடத்தே வெள்ளியம்பலத் தம்பிரானிடம் பாடங் கேட்ட பெரியராவர். அதனால் அன்னார் புலமையைப்பற்றிப் பேசவேண்டுமென எண்ணினேன். ஆகையால் சிவப்பிரகாசர் செய்யுள் நலம் என்ற இத்தலைப்பை எடுத்துக்கொண்டேன்.

அவரியற்றியதிருவெங்கைக் கலம்பகத்தில் சுவடு கண்டிரங்கல் என்னுந் துறையமையப் பாடப்பட்ட (சஉ) ஒரு பாடலை ஈண்டு எடுத்துக்கொள்கிறேன். அப்பாடல் வருமாறு:

என்னடிகள் வெண்குறள்நேர் அடியி ரண்டும்
　　என்றலையில் இருத்தும்இறை வெங்கை நாட்டில்
முன்னடிகள் இரண்டும்நெடி லடிகள் பின்னர்
　　முயங்கடிகள் இரண்டுநேர் அடிக ளாகப்
பன்னடிகள் ஒருநான்கும் கொடுந டக்கும்
　　பழுதகல்வெண் டுறைபோலப் படர்த லாலே
பின்னடிகள் எங்கள்திரு வடிகள் முன்னர்ப்
　　பெயர்ந்தஅடி எழிலிளஞ்சேய் அடிகள்தாமே.

இதன் பொழிப்பு. என்னடிகளாகிய திருவள்ளுவரால் இயற்றப்பட்ட குறள் வெண்பாவின் அடிகள் இரண்டையும் ஒத்த தன் திருவடிகள் இரண்டையும் என் தலையில் இருத்தும் தலைவனாகிய சிவபிரானது திருவெங்கை நாட்டில், முன்னடிகள் இரண்டு நெடிலடிகளாகவும், பின்னர்க் கலந்த அடிகள் இரண்டும் நேர் அடிகளாகவும், சொல்லப்பட்ட ஒரு நான்கடிகளையும் கொண்டு நடக்கும் குற்றமற்ற வெண்டுறைபோலச் செல்லுதலாலே, பின்னர்க் காணப்படும் அடிகள் எம்முடைய திருமகள் அனையவள் அடிகளாகும். முன்னர்ப் பெயர்ந்த அடிகள் அழகிய இளமை பொருந்திய முருகனை அனையான் அடிகள் ஆகும் என்பது.

என்னடிகள் வெண்குறள் நேர் அடியிரண்டும் என்னும் இவ்வுவமை வினை பயன் மெய் உரு என்ற நான்கனடியாகத் தோற்றியதாகும். அவற்றை முறையே சிந்திப்போர் அகவிருளை நீக்குதல், இம்மை மறுமை வீடு என்னும் மூன்றையும் பயக்குதல், பேரடியும் சீறடியும் கொண்டிருத்தல், தூய்மையுடைத்தாய்த் தலைமை பெற்று விளங்குதல் ஆகிய இப் பொதுத் தன்மைகளை உவமான உவமேயங்களின்கண் அமைத்துக்காண்க. இன்னும் இவ்வுவமையின்கண் உள்ள சிறப்புக்களைக் காண்பாம்.

தென்னாட்டையே தனக் குரிமையாகக்கொண்டு மற்று எந் நாட்டவர்க்கும் இறையாய் விளங்கும் சிவபிரான் திருவடிகட் குத் தென்னாடே தனக்குடைத்தாய் மற்றெந்நாட்டவராலும் போற்றப்படும் தலைமை வாய்ந்த திருக்குறள் உவமையாக அமைந் தது எத்துணை இன்பம் பயக்கின்றது பாருங்கள் !

இன்னும் இறைவியுடன் சேர்ந்தவழியே இறைவனுக்கு வன்மை யுண்டாகிறது என்ற குறிப்பும் இதன்பால் உண்டு.

வடமொழிவேதம் இறையைக் காணவில்லை என்கின்றனர். தமிழ் வேதமாகிய திருக்குறள் இறைவன் அடிகளுக்கு உவமை யாயிற்றெனின் இவ் விரண்டின் சிறப்பையும் சீர்தூக்கி யறிந்து கொள்க.

இன்னும் இச் செய்யுளின்கண் சொன்னலம், பொருள் நலம், உவமை நலம் ஆகிய நலங்கள் செறிந்துள. அவற்றை விரிப்பிற் பெருகும். காண விழைவோர் செந்தமிழ்ச் செல்வி சிலம்பு 22. பரல் 10-ல் விரிவாக எழுதியுள்ளேன். ஆண்டுக் காண்க.

---

## நாடகங்களில் நடித்தவர்கள்

திரு. T. K. கணபதி (நாடக அமைச்சர்)
" இராம. நவநீதகிருட்டிண பிள்ளை
" V. S. குற்றாலலிங்கம் பிள்ளை
" ம. சிவசம்பு
" குமாரகணபதி
" கு. சங்கரன்
" கு. பரமசிவன்
" S. கணேசன்
" கிருட்டிணமூர்த்தி
" சுந்தரம்
" இராசப்பா
" T. K. ஆறுமுகம்
" சேதுராமய்யர்
" அய்யாத்துரைப் பிள்ளை
" ச. நடராச பிள்ளை
" கோமதிநாயகம்
" சுந்தரமூர்த்தி
" அ. இ. முத்துக்குமாரசாமி
" ஆ. முருகேசன்
" மு. சுந்தரவிநாயகம்

## நெல்லைச் சித்தாந்த வகுப்பு நன்கொடையாளர்கள்

| | தொகை | | |
|---|---|---|---|
| | ரூ. | அ: | பை |
| திரு. சி. ச. அருணசலம்பிள்ளை, திருநெல்வேலி | 250 | 0 | 0 |
| ,, A. R. சண்முகம் பிள்ளை ,, | 250 | 0 | 0 |
| ,, O. சொரணம் பிள்ளை ,, | 250 | 0 | 0 |
| ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம், தருமை ஆதீனம் | 201 | 0 | 0 |
| திரு. M. C. S. இரத்தினசபாபதி செட்டியார், கும்பகோணம் | 75 | 0 | 0 |
| ,, C. S. இரத்தினசபாபதி முதலியார், கோவை | 75 | 0 | 0 |
| ,, V. C. சுப்பையா கவுண்டர், கோவை | 75 | 0 | 0 |
| ,, வயி.வ. லெட்சுமணன் செட்டியார், வலம்புரி | 75 | 0 | 0 |
| ,, ச. கு. சங்கரநாராயண பிள்ளை, திருநெல்வேலி | 72 | 0 | 0 |
| ,, மு. சுப்பிரமணியன் செட்டியார் ,, | 51 | 0 | 0 |
| ,, ராம. கு. விசுவநாத பிள்ளை ,, | 51 | 0 | 0 |
| ,, S. S. பிள்ளை ,, | 50 | 0 | 0 |
| ,, வ. சுப்பையா பிள்ளை ,, | 40 | 0 | 0 |
| ,, ராம. ஆனந்தம் பிள்ளை ,, | 36 | 0 | 0 |
| ,, M. சோமசுந்தரம் பிள்ளை ,, | 25 | 0 | 0 |
| ,, C. சண்முகம் பிள்ளை ,, | 25 | 0 | 0 |
| ,, சே. ஆ. சுப்பிரமணிய பிள்ளை ,, | 25 | 0 | 0 |
| ,, P. V. K. சண்முகம் பிள்ளை, கோவை | 25 | 0 | 0 |
| ,, K. P. குகன் பிள்ளை, திருநெல்வேலி | 25 | 0 | 0 |
| ,, S. S. A. O. R. சண்முகவேலாயுதம் பிள்ளை, திருநெல்வேலி | 21 | 0 | 0 |
| ,, T. K. கைலாசசுந்தர முதலியார் ,, | 18 | 0 | 0 |
| ,, வே. மாணிக்கவாசகம் பிள்ளை ,, | 18 | 0 | 0 |
| ,, சி. த. சோமசுந்தரம் பிள்ளை ,, | 15 | 0 | 0 |
| ,, டாக்டர். R. சண்முகம் பிள்ளை ,, | 12 | 0 | 0 |
| ,, மாணிக்கவாசகத் தம்பிரான், திருப்புறம்பயம் | 10 | 0 | 0 |
| ,, ராம.கு.ராம. இராமசாமி செட்டியார், திட்டை | 10 | 0 | 0 |
| ,, சு. பத்மநாப பிள்ளை, திருவனந்தபுரம் | 6 | 0 | 0 |
| ,, பொன்னம்பலம், விருதுநகர் | 5 | 0 | 0 |
| ,, C. சுப்பிரமணிய பிள்ளை ,, | 5 | 0 | 0 |
| ,, வே. சங்கரலிங்க நாடார் ,, | 3 | 0 | 0 |
| ,, சுப்பிரமணியம் ,, | 2 | 0 | 0 |
| ஆகமொத்தம் ரூ. | 1801 | 0 | 0 |

## நெல்லைச் சித்தாந்த வகுப்பு வரவு செலவு கணக்கு

| | வரவு | | | செலவு | | |
|---|---|---|---|---|---|---|
| | ரூ. | அ. | பை | ரூ. | அ. | பை |
| நன்கொடை (முன்பக்கப்படி) | 1801 | 0 | 0 | | | |
| திருநெல்வேலித் தென்னிந்திய சங்கத்தார் நன்கொடை | 706 | 11 | 10 | | | |
| திருப்பனந்தாள் காசிமடம் மணி விழாப் பரிசு (உண்டியல்) | 500 | 0 | 0 | | | |
| திரு. சி. ச. அருணசலம் பிள்ளை பொற்கிழி (பவுன்) கொடுத்த வகையில் வரவு | 65 | 8 | 0 | | | |
| அச்சுக்கூலிச் செலவு | | | | 274 | 4 | 6 |
| வழிச் செலவு | | | | 99 | 1 | 0 |
| அஞ்சற் செலவு | | | | 32 | 6 | 0 |
| ஆசிரியர் சொற்பொழிவாளர் கட்குப் பரிசும் கைம்மாறும் | | | | 295 | 8 | 0 |
| ஆசிரியர் அவர்களுக்குப் பொற் கிழி கொடுத்தது | | | | 565 | 8 | 0 |
| உணவு | | | | 1019 | 5 | 7 |
| பந்தல், பூ, விளம்பரம் முதலியன | | | | 93 | 3 | 0 |
| ஒலிபெருக்கி | | | | 150 | 0 | 0 |
| நாடகம், நடனம் முதலியன | | | | 178 | 5 | 0 |
| ஊர்வலச் செலவு | | | | 86 | 8 | 0 |
| சில்லறைச் செலவு | | | | 168 | 1 | 3 |
| பரிசு நூல்கள் | | | | 111 | 1 | 6 |
| | 3073 | 3 | 10 | 3073 | 3 | 10 |

மு. காசிவிசுவநாதன் செட்டியார்,
சங்கத் தலைவர்.

வ. சுப்பையா பிள்ளை,
சங்கச் செயலாளர்.

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை 2-140, பிராட்வே, அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர் : வ. சுப்பையா.